காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

26—3—72

★

உள்ளே......

இந்திரா சோஷலிசம்
இதுதானா?
இன்னுமா?
(தலையங்கம்)

எல்லோரும்
இந்நாட்டு மன்னர் (1)
(டாக்டர் அறிஞர் அண்ணா)

தொழில் வளர்ச்சிக்குத்
தடையாக இருப்பது
மத்திய அரசே!
(அமைச்சர் சட்டமன்ற உரை)

அவள் அவசரப்பட்டு
விட்டாள்......
(சிறு கதை)

விலை 25 காசு

யார் வெறுத்தார்?

"கலைச்செல்வன்"

★

மெல்லத் தழுவிய உந்தன் தலைவனும்
என்னடி செய்திட்டான்? — உன்
எண்ணமும் கொய்திட்டான்!
அல்லிச் சரமலர் மெல்ல வதங்கிட
அன்பன் அணைத்தானோ? — அந்த
இன்பம் நினைத்தாயோ?
முல்லை மலரென உன்னை நினைத்தவன்
நெஞ்சினில் சூடினனோ? உனைக்
கொஞ்சியே பாடினனோ?
இல்லை யெனவே நீமறுத் துமவன்
அள்ளிக் குடித்தானோ? — உனை
மெல்லப் படித்தானோ?

முத்துப் பனிமலர் மெல்ல அசைந்திட
உன்மனம் யார்பறித்தார் — உன்
பெண்மனம் தான்தரித்தார்?
சித்தும் பிறகலை கற்றுத் தெளிந்தவள்
உன்னையும் யார்வெறுத்தார்? — ஏன்
என்னையும் நீவெறுத்தாய்?
தத்தம் எனயெனை இன்றே அளித்திட
உன்னிடம் நான்கொடுத்தேன் — நான்
என்னையும் தான்விடுத்தேன்!
பத்து வயதினில் பார்த்த நிலவிது
எத்தனை நாளிருந்தேன் — உனைக்
கொத்திட நான்பிறந்தேன்!

அவள் அவசரப்பட்டுவிட்டாள்......

(ஆளூர் ஜலால்)

புரொபஸர் சீதாராமின் சீற்றத்தை எதிர்பார்த்து நின்ற மாணவர் கூட்டம் ஏமாந்து விட்டது.

மிகச் சாதாரண விஷயத்துக்கெல்லாம் தடபுடலாகக் குதித்துச் சாடும் புரொபஸர், அவலமும், இழுக்கும் அழுந்திப் படிந்த அசாதாரண விஷயத்தைக் கேட்ட பிறகு—அந்தத் தவறுக்குக் காரணமான ரவி அவர்முன்னே நிறுத்தப்பட்டிருக்கும் போது—எப்படி இவ்வளவு அமைதியாக, வெறித்தனமில்லாமல் வெறுமையாய் நிற்கிறாரோ?

"ரவி! உனக்கு அந்தப் பெண்ணை பிடிச்சிருக்கா?"- இது அவருடைய கோள்வி.

அந்தக் கேள்விக்கு ரவியால் உடனடியாக பதில் சொல்ல முடியாத அளவுக்கு பயத்தால் அவனுடைய கொத்தவரங்காய் உடல் படபடத்தது.

"ரவி! டோன்ட் ஃபிரைட்டன். நிஜமாகத்தான் கேட்கிறேன், உனக்கு அந்தப் பெண்ணைப் பிடித்திருக்கிறதா?"— புரொபஸரின் கேள்வியில் சற்று சூடு பரவ ஆரம்பித்தது.

"எஸ்......சார்!"— டக்கென்று பதில்! அது ரவியின் குரல்!

"அப்படியானால்...இதற்குமுன்- அதாவது இப்படியொரு களங்கத்தை அவளுக்கு ஏற்படுத்திக் கெடுக்குமுன்—நீ அவளைச் சந்தித்துப் பேசியதுண்டா?"

"இல்லை"

"என்ன இல்லை."

"நீங்கள் நினைப்பது மாதிரி இல்லை."

வேறு எப்படி?"

"அவளும் என்னை விரும்பினாள்."

"அதை நீ எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறாய்?"

"இல்லாவிட்டால் அவளால் எப்படி என் விருப்பத்திற்கு சம்மதித்திருக்க முடியும்?"

"நிச்சயமாக அவள் சம்மதிக்கவில்லை. உன்னுடைய முரட்டுத்தனமான வெறிக்குத்தான் அவள் ஆளாக்கப்பட்டிருக்கிறாள். அவள் ஒரு அப்பாவிப் பெண். அதனால்தான் உன்னுடைய பலவந்தம் அவளை களங்கப்படுத்திவிட்டது."

"நீங்கள் மட்டும் எப்படி அவ்வளவு உறுதியாகச்சொல்கிறீர்கள், அவளைப் பற்றி!" அவனுடைய இந்தக் கேள்வி புரொபஸரை ஒரு கணம் நிலை தடுமாற வைத்த அதே கணத்தில் அவனும் இதுதான் கேட்டிருக்கக் கூடாத கேள்வி என்பதைப் புரிந்துகொண்டான்.

என்றாலும் புரொபஸர் தன் விளக்கத்தை விரிவுபடுத்தத் தவறவில்லை.

"...அவள்...தனக்கு அவமானம் ஏற்படப் போகிறதே என்பதைப் பற்றிக் கூட சிந்திக்காமல், உடனடியாக, வார்டனிடம் உன்னைப் பற்றிப் புகார் கூறியிருக்கிறாள். அதனால்தான் இந்தக் காலேஜ் காம்பவுண்டையும் தாண்டி அவளைப் பற்றிய அவமானம்—நீ செய்த மிருகத்தனம்—பரந்து விட்டிருக்கிறது! இப்போது நான் உன்னை விசாரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில், என்னுடைய சுய கௌரவத்தைக் கூட அடகு வைத்து விட்டு, உன்னிடம் குற்றவாளியைப் போல் உன்னுடைய கேள்விகளுக்கும் பதில் சொல்லியாக வேண்டிய பரிதாபகரமான நிலையில் நிற்கிறேன். பரவாயில்லை. எனக்கு இப்போது தேவை தெளிவு. நீ எப்படி? எங்கே? அவளை?"...அதற்குமேல் அவர் பேச விரும்பவில்லை என்பதை மேசையில் ஓங்கிக் குத்திய அவரது கரங்கள் உணர்த்தின.

ரவியின் இதயத்தில் விழுந்த குத்தோ அது? கரகரவென வழியும் கண்ணீர்த் துளிகளில், பேச நிர்க்கதியற்ற துவண்ட நிலையில் துடிப்பொடுங்கி நின்றான்.

"நிச்சயமாக அவனிடமிருந்து இனி எந்த வித பதிலையும் எதிர்பார்க்க முடியாது."—புரொபஸர் சீதாராமின் தளர்வற்ற நம்பிக்கையால் அவரது கை அழைப்பு பணியை அழுத்துகிறது. பியூன் ஓடோடி வருகிறான்.

"அந்தப்பெண்ணை வரச்சொல்!'!

போகிறான்.

சற்று நேரத்திற்குப் பின் வருகின்ற அவன் தருகின்ற பதில்:

"அவள் இறந்து விட்டாள்!"

"வாட்" புரொபஸர் சீதாராமின் நம்பிக்கை பொடிப் பொடியாகிவிட்டது-

உருத்தெரியாமல், எலும்பெல்லாம் நொறுங்கி, மண்டை சிதறி, அதனுள்ளே அடை பட்டிருந்த மூளை இரத்தத்தில் குழைந்து, பரந்து, சிதறிய சதைத் துண்டுகளில் ஒட்டிக்கொண்டிருந்த அந்த உடல்—அதுதான் அந்தப் பெண்!

புரொபஸர் சீதாராமின் கண்கள் பார்வையை அந்தப் பரிதாபத்தின்மீது பதிக்கக் கூசி, மூடிக் கொள்கின்றன.

"பிட்டியபிள் கேர்ல்! அவசரப்பட்டு விட்டாள்." அவரது உதடுகள் முணுமுணுத்தன.

அவளது தற்கொலைக்குக் காரணம் ரவி. அவன் அவளுக்கிழைத்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அதற்கு விடிவு கிடைக்குமென்ற அசட்டுத் தனத்தில் வார்டனிடம் வெளியிட்ட அவள், இப்போது தன்னைப் பற்றிய களங்கம் எல்லோருக்கும் தெரிந்து கடைசியாக அது ஆத்திரக்காரப் புரொபஸர் சீதாராமின் பயங்கரமான பார்வையில் விசாரணையாக விரிந்து விட்டுள்ளதை அறிந்துகொண்ட பின் இப்படியொரு அசம்பாவிதத்தில் தன்னைப் பிணைத்துவிட்டாள்—எனவே இந்தத் தற்கொலை நிகழக் காரணமானவன் ரவி!" என்று எல்லோராலும் முடிவு குறிக்கப்பட்டு, அவனைக் கைது செய்ய போலீஸாரும் குழுமிவிட்டனர். சிதைந்த அந்தப் பெண்ணுரு ஆம்புலன்ஸில் ஏற்றப்படுகிறது.

அமைதி! அமானுஷ்யமான அமைதி!

ஆம்புலன்ஸ் வண்டி புறப்பட்டு

(4-ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை!

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13   ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 26—3—72 | இதழ் 37

இந்திரா சோஷலிசம் இதுதானா? இன்னுமா?

சென்ற கிழமை இறுதியில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய நிதிநிலை அறிக்கையை ஆராயும்போது, மத்திய அரசு, உண்மையிலேயே மக்களது கூன்விழுந்த முதுகு நிமிர வேண்டும் என்ற திட்டத்தை, விழைவு அளவிலாவது கொண்டுள்ளதா என்பதைப்பற்றி ஐயப்பட வேண்டியிருக்கிறது.

சோஷலிசம், சோஷலிசம் என்று வாய்மலியப் பேசுவது என்பது இன்றைக்கு நாட்டு அரசியலில் ஒரு தவிர்க்கமுடியாத தேவையாகி விட்டிருக்கிறது.

சோஷலிசம் என்ற சொல்லின் பொருளையும், அதன் விரிவு படுத்தப்பட்ட விளக்கத்தையும் நாட்டு மக்களில் எத்தனைப்பேர் அறிந்திருக்கிறார்கள் என்பது கணக்கெடுக்கப்பட வேண்டிதன்று என்றாலும், அந்தச் சொல்லை எந்தக் காரணத்துக்காகவாவது அரசியல் கட்சிகளும், அரசினரும் பயன்படுத்தி விடுகின்றனர்.

சோஷலிசச் சுவையில் மயங்கிப் போயிருக்கும் மக்களும், வாய்மலிந்த அந்த முழக்கத்தின் பேரால், தங்களது வாழ்க்கை மேலும் மேலும் சுமையாகிக் கொண்டிருக்கிறது என்பதனை உணராமலே இருந்து விடுகின்றனர்.

‘கற்பு’ என்பதைப்பற்றி கண்ணகி பேசுவது சரியானதாக இருக்கக்கூடும்; ஆனால் அதைப்பற்றி பாஞ்சாலி பேசவும் விளக்கம்தரவும் முற்பட்டால்?

அப்படித்தானிருக்கிறது மத்திய அரசின் சோஷலிசத் திட்டங்கள்.

ஏழைமக்களது வாழ்க்கையை உயர்த்துவதற்காகவே தான் பிறந்து வளர்ந்து மத்திய அரசில் தலைமை அமைச்சராகவும் பதவி ஏற்றிருப்பது போல, நாள்தோறும், மேடைதோறும் சோஷலிசம், சோஷலிசம் என்று பேசிவிட்டு அல்ல, பேசிக் கொண்டே, அந்த சோஷலிசச் சித்தாந்த செயற்பாடுகளால் நாட்டின் எந்தப் பகுதி பயன் பெற வேண்டுமோ, அந்தப் பகுதி மக்களே மேலும் சுரண்டப்படவும், தாங்கமுடியாத வாழ்க்கைப் பளு அடையவும் செய்து கொண்டிருக்கிறார் இந்திராகாந்தி என்றுதான் வெளிப்படையாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்த நிதி நிலை அறிக்கையில், சோஷலிசச் செயற்பாட்டுக்காக எந்தெந்த திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு தனி நபர் கமிஷன் அமைத்துத்தான் ஆராய வேண்டும்! ஆனால், பணம் பறிக்கத்தக்கத் திட்டங்களை மட்டும் கொள்ளை கொள்ளையாக அறிவித்திருக்கிறது.

அரசுகள் நிதிநிலை அறிக்கையினை வெளியிடப் போகின்றன என்ற செய்தி கிடைத்தவுடனேயே நாட்டு ஏழை எளிய மக்களது வயிறுகள் தீப்பற்றிக் கொண்டு விடுகின்றன, இன்னும் எந்தெந்த வரிகளைச் செலுத்த வேண்டுமோ, எவ்வளவு பளுவைத் தாங்க வேண்டியிருக்குமோ என்ற அச்சத்தால்!

ஒவ்வோராண்டும் இந்த அச்சம் மிகுந்து கொண்டே போகின்றதே யொழிய, அப்பாடா! என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட வழி இனி என்றென்றுமே இருக்காதோ என்றே கவலைப்பட வேண்டியிருக்கிறது.

வரி விதிக்கப்பட, இனி, வேறு இனங்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது என்பதைத் தெளிவாகக் காட்டுவதுதான் மண் எண்ணெய்க்கு லிட்டருக்கு 6 காசுகள் வரி உயர்த்தி இருப்பதாகும்.

தமிழக அரசு, லாட்டரித் திட்டத்தை அறிமுகப் படுத்தியபோது, இந்த அறிமுகத்துக்கு முன்பே வேறு பல மாநிலங்களிலும் இத்திட்டம் செயலிலிருந்தது என்றாலும், வழக்கம் போன்ற எதிர்ப்பு என்ற வகையில் தமிழகத்தில் எல்லாருமே சேர்ந்து ஒப்பாரி வைத்து ஓய்ந்தார்கள்.

மத்திய அரசு வரையிலும் காவடித் தூக்கியும் பார்த்தார்கள். அப்போது லாட்டரித் திட்டம், மாநில அரசுகளின் விருப்புவெறுப்புக்களைப் பொறுத்தது; டெல்லி தலையிட வேண்டிய அவசியத்துக்கு அப்பாற்பட்டது என்று இன்றைய தலைமை அமைச்சரே “வக்காலத்து” வாங்கிப் பேசி இருக்கிறார்.

அந்த அளவுக்கு ஒரு மாநில அரசின் உரிமைக்குரிய ஒரு திட்டத்தின் அடிப்படையில், லாட்டிரிகளுக்கும் வரி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது இப்போது!

லாட்டிரியில், ஒருமாநில அரசு ஒரு ஒருலட்சம் ரூபாய் சம்பாதிக்கிறது, என்றால், அவற்றில் மாநில அரசின் தரப்பில் மட்டும் 34,500 ரூபாய் வரியாக மத்திய அரசுக்குச் சேர்ப்பித்து விடவேண்டுமாம்!

மக்கள் தரப்பிலோ, ரூபாய் ஒருலட்சம்பெறுபவர் ஒருவர் ரூ. 23,750 செலுத்திவிட வேண்டும் வரியாக, அத்துடன் வருமான வரித்துறையின் கண்களும் இனி இவர்கள் மேல் உண்டு.

இதுபோலவே, பல்லாண்டுக்காலமாகவே உரங்களின் மீதான தீர்வைகளின் உயர்வைக் குறைக்க வேண்டும் என்று தமிழ்நாடு கோரிவந்திருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து உணவுப் பண்ட இறக்குமதிகளை நிறுத்திவிட வேண்டும் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு, செயல்பட்டுக் கொண்டுவரும் இந்த நேரத்தில், விவசாயம் பெரும் அளவுக்குப் பாதிக்கப்படும்படியாக உரங்களின்மீதும் தீர்வை உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேபோல, பம்ப் செட்டுகளின்மீதும் தீர்வை உயர்ந்திருக்கிறது. வரி இனங்கள் விஸ்தரிக்கப்பட வழி இல்லை என்பதால்தான் தீர்வைகளின் உயர்வு என்ற இரங்கத்தக்க நிலை, ஒரு அரசுக்கு அவலமான நிலையாகும்.

பணம் திரட்ட வேண்டும் என்பதிலே இருக்கின்ற அழுத்தம், அதனைச் செலுத்திக் கொண்டிருக்க மனிதன் உயிரோடு இருந்து கொண்டிருக்க வேண்டும் என்பதிலே காட்டப்படவில்லை என்பதற்குப் பெயர்தான் இந்திராவின் சோஷலிசம் என்றால், அந்த இந்திராசோஷலிசம் இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்று கூற நாட்டுமக்கள் முன் வந்தால், அதனைக் குறை கூறமுடியாது.

அண்மையில் நடைபெற்று முடிந்த மாநிலத் தேர்தல்கள் மூலம், துணைக்கண்டத்தை மீண்டும் 1957க்குக் கொண்டுசென்றுவிட்ட பின்னர், மக்களின் நல்வாழ்வுபற்றி அங்கலாய்த்துப் பயனில்லை.

ஆனாலும், மாநிலங்களுக்கு நமதுயோசனையாக ஒன்றை, இச்சந்தர்ப்பத்தில் முன்வைப்பது கடமையாகிறது.

பரிசுச்சீட்டுத்திட்டத்தின் அடிப்படையில், பல லட்சங்களை ஒருவருக்கே இதுவரையில் சரிப்பணம் செய்து வந்தது போதும். உயர்ந்தபட்சம் 5000 என்று மட்டும் நிர்ணயித்துவிட்டால், பரிசுபெறுவோரின் எண்ணிக்கையும் விரிவடையும்; அதன் மூலம் விற்பனையும் பெருகும்; மத்திய அரசுக்கும் ஒரு படிப்பினையாக இருக்கும்.

இந்த விழைவின் செயற்பாட்டை நாம் எதிர்பார்க்க முடியாதென்றாலும், எடுத்துக்காட்டுவது நமது கடமை!

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இனி என்னென்ன வகையில், எந்தெந்த முறையில் தீர்வைகளையும், வரிகளையும் உயர்த்தி "சோஷலிசத்தை"ச் செயற்படுத்தலாம் என்று இப்போதே மத்திய அரசின் நிதித்துறை யோசிக்கத் தொடங்குவது, அதன் வருங்கால வேலைப்பளுவை குறைப்பதாக இருக்கும் என்று, மத்தியஅரசுக்கும் நமது யோசனையாக ஒன்றைச் சொல்லி வைக்கிறோம்!

ஆனால் நாட்டுமக்களுக்கு, "கற்பு" என்பதனைப் பற்றிச் சொல்லத் தகுந்தவர்கள் யார் என்பதிலே நிர்ணயம் செய்துகொள்ளத் தவறிவிடக்கூடாது என்றும், தவறினால், வாழ்க்கையை, அது இனி தேவையில்லை என்று ஒதுக்கித் தள்ளிவிடத் தயாராக இருக்க வேண்டும் என்பதையும் மட்டுமே நம்மால் இப்போதைக்குச் சொல்ல முடியும்!

—திருவாரூர் முத்துராமன்.

★

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது; போலீஸ் வான் புறப்படப் போகிறது.

"நில்லுங்கள்!" — வெறித்தனமான, அழுத்தம் பதிந்த குரலோடு புரொபஸர் சீதாராம் போலீஸ் வானை நோக்கி ஓடுகிறார். வானின் சக்கரங்கள் உருளவில்லை. அனைவரின் கண்களும் பிரமிப்பால் உருளுகின்றன.

"ரவியை விட்டு விடுங்கள். என்னைக் கைது செய்யுங்கள்!" புரொபஸரின் கரங்கள் விலங்கிட்டுக் கொள்ள நீளுகின்றன.

"நீங்க என்ன சொல்றீங்க புரொபஸர் சார்?" காவல் அதிகாரியின் அதிகார தொனி.

"அந்தப் பெண் தற்கொலை செய்துகொள்ளக் காரணமானவன் நான்தான்" அழுத்தமாக ஒலிக்கிறது புரொபஸரின் குரல்.

"எப்படி?" ஐயத்துடன் தெறிக்கிறது அதிகாரியின் ஒலி.

"நான் ஒரு ஆத்திரக்காரன், அவசரப்பட்டு எதையும் செய்யும் பயங்கர வெறித்தனத்திற்கு அடிமையாகி விடுகிறவன். இது எல்லோருக்குமே தெரியும் உங்களுக்குக்கூட என்னைப் பற்றி புரியுமென நம்புகிறேன்."

"இருக்கலாம். அதற்கும் இதற்கும் என்ன சம்மந்தம்?"

"நிறைய இருக்கிறது. ஒரு அப்பாவிப் பெண்ணைக் கற்பழித்த பெரும் பாதகத்தைப் புரிந்துவிட்டு, என் முன்னே நிறுத்தப் பட்டிருந்த ரவியின் கழுத்தைத் திருகி எறிந்து விடுமளவுக்கு என் கைகள் பரபரத்தன, நான் அடக்கிக் கொண்டேன். அப்போதுமட்டும் உங்கள் ஆத்திரத்தை எப்படி உங்களால் அடக்கியாள முடிந்தது? என்று நீங்கள் கேட்கலாம். அதுவும் உண்மைதான். அப்போது நான் சுயநலக்காரனாக மாறிவிட்டேன். அதனால்தான் ரவியை அடிக்கவில்லை. உதைக்கவில்லை. கொல்லவில்லை. அவனைத் தொடவேயில்லை."

"நீங்கள் என்னசொல்கிறீர்கள்?"

"உங்களுக்குப் புரியாததைச் சொல்லுகிறேன். ரவியிடமிருந்து உண்மைகள் அனைத்தையும் தெரிந்து கொண்டு விடவேண்டுமென்று நான் துடித்தேன். ஆனால் என்னுடைய பயங்கரத்தன்மையை புரிந்து கொண்டிருக்கும் அவனால் எதையுமே சொல்ல முடியவில்லை. அப்படிச் சொல்வதால் தனக்கு என்னென்ன விபரீதங்கள் நிகழுமோ? என்ற பயத்தில் அவன் ஏதேதோ உளறினான். என்னிடமே கேள்விகள் கேட்டான். அவனிடமிருந்து உண்மையை வரவழைக்க என்னால் முடியவில்லை. அதனால் அந்தப் பெண்ணை அழைத்து வரச் சொன்னேன். அதற்குள் அவள் அவசரப்பட்டு விட்டாள்! அவள் மாடியிலிருந்து கீழே விழுந்து சிதறுவதற்குக் காரணம்......நான் ...நான்......நானே தான். என்னை—என் பயங்கர குணத்தை-எல்லோரையும் விடத் தெளிவாகப் புரிந்து வைத்திருந்த ஒரே காரணத்துக்காகத்தான் அவள் தற்கொலை செய்திருக்கிறாள்."

"நீங்கள் நினைப்பது தவறு! ஒரு கல்லூரிப் புரொபஸருக்குப் பயந்து அந்தப் பெண் இந்த முடிவுக்கு வந்திருக்கமாட்டாள். ஒருவேளை உங்களுக்கு ரவி உறவுமுறையாக இருக்கலாம். அதனால்தான் நீங்கள் வேண்டுமென்றே உங்கள் மீது இப்போது பழியை சுமத்திக் கொள்கிறீர்கள். அவனை விசாரணை செய்யும்போதும் நீங்கள் நிதானமாக நடந்துகொண்டிருக்கிறீர்கள்."

"நோ! நோ! நோ! ரவிக்கும் எனக்கும் எந்தவித சொந்த பந்தமும் இல்லை."

"பின் ஏன் இப்படியொரு முடிவுக்கு நீங்கள் வரவேண்டும்?"

"அவனை சொந்தமாக்கிக் கொள்ள முடியாத காரணத்தால். அவனால் கற்பிழந்த பெண்ணை அவனுக்கே மண முடித்து வைப்பதன் மூலம் அந்த உறவை ஏற்படுத்த எண்ணினேன். அதற்குள் அவள் அவசரப்பட்டு விட்டாள். முரட்டு உள்ளம் படைத்த ஒரு தந்தையால் தனக்கு என்ன முடிவு ஏற்படப் போகிறதோ? என்ற பயம்தான் அவளைக் கொன்றுவிட்டது. ஆமாம் இன்ஸ்பெக்டர்! தற்கொலை செய்துகொண்டவள் என் ...மகள்!..." இப்போது புரொபஸரின் கண்களில் வெறியில்லை. வேகமில்லை. அவையனைத்தும் கண்ணீராய்க் கரைந்து வடிந்தன. *

காஞ்சீபுரம்

தம்பி !

எல்லோரும் இந்நாட்டு மன்னர் (1)

சூழல்மொழி, கயல்விழி, துடியிடை, புன்னகை பூத்திடும் பொன்னவிற் மேனியாள், ஏழிசைவல்லி, ஆடலழகி, எனும் அணங்குகள், தத்தமது திறனத்தனையும் தங்கு தடையின்றித், தரக்குறைவின்றிக் காட்டிப் பார்த்தனர்—காவலன், கடுகடுத்த முகத்தோனனனேயன்றிக், கலகலப்புப் பெற்றானில்லை.

மாற்றார்கள் களத்தில் போட்டோடிச் சென்ற, மாமல்லர்களால் எடுத்துவரப்பட்ட, குருதி தோய்ந்த கொடிகள், உடைந்துகிடந்த யானைத் தந்தங்கள், வாட்பிடிகள், வேற்கம்புகள், இவையெலாம் கொண்டு வந்து எதிரே குவித்துக் காட்டினர், கோமான், வீரச் செயல் பற்றிய நினைவுபெற்று, மகிழ்ச்சி பெறுவான் என்று எண்ணி; மாமன்னனே, அப்பொருட் குவியலைக் கண்டு புன்னகையும் செய்தானில்லை.

கன்னியரின் கடைக்கண் ஊட்டிடாத சுவையைக் கனிவகையா தந்திடும்! எனவே, பழவகைகளைக் கொணர்ந்ததும், பட்டத்தரசன், எட்டிப்போ! என்று கட்டளையிட்டான், பணியாட்களை நோக்கி.

மன்னன் மனமகிழ வேண்டும்—அவையினர் ஏதேதோ எண்ணினர்; தெளிவு பிறந்திடவில்லை.

"யானறிவேன்; அவருக்குக் களிப்பூட்டும் வகை" என்றான், கவிதை வல்லானொருவன்.

"ஐயா புலவரே! எதுகை மோனையைக் காட்டியா, மன்னனை மகிழ்விக்க முயல்கிறீர். வானவில்லென வளைந்து நின்றாள்.
வடிவழகி; மன்னன் ஏறெடுத்தும் பார்த்திட
மறுத்தான். கரம் இரண்டன்றி வேறொர்
துணை தேடிடாது, வேங்கையுடன் போரிட்
டுக், கழுத்தை நெறித்தானே, வேங்கையை
—வெற்றிவேலன் பெற்றெடுத்த வீரமைந்தன்
—அதன் பற்களைக் கொட்டிக் காட்டி
னேம்—சுற்றுமுற்றும் பார்த்தனனே
யன்றி, மன்னன், அதனை உற்றும்
பார்த்ததுண்டா? இந்நிலையில் உள்
ளான ஊராள்வோன்; நீவிர், ஏடு
தூக்கிக் காட்டிடின் வேந்தன் கொண்
டுள்ள கசப்பெலாம் கரைந்தோடிப்

> 1960-ஆம் ஆண்டு தமிழ்நாட்டு அரசியலில், பரபரப்பும் விறுவிறுப்பும் ஏற்பட்டது. அவ்வாறு ஏற்படக் காரணமாக இருந்தவை, அமரர் அண்ணாவின் கட்டுரைத் தொடர்கள்.
>
> அத் தொடரின் முதல் கட்டுரை இது. 30-10-'60 அன்று 'திராவிட நாடு' இதழில் வந்தது.

போகும், களிப்பு மலரும் என்று கருதுவது, எத்துணை பேதைமை!" என்று எடுத்துரைத்தனர், அவை அமர்ந்த முதியோர்.

'ஐயன்மீர்! அருங்கவிதைத் திறன்காட்டி அல்ல, மகிழ்ச்சியூட்ட விரும்புவது, என் கவிதையும், அரசர்க்குச் சிரிப்பூட்ட அல்ல; அவனிக்கு அறிவூட்ட! அதனையும் அறிமின்! நான் நினைப்பது முற்றிலும் வேறு!!" என்றான் புலவன்.

"வாதிட்டுப் பொழுதினை ஓட்டிடுவதைக் காட்டிலும், அவர் வகுத்திடும் முறையேனும், மன்னரின் சோகத்தை நீக்கிடுகிறதா என்பதைக் கண்டிடுவதே சாலச் சிறந்தது" என்றனர் ஆன்றோர்.

புலவர், எழுந்தார்; பணியாளிடம், ஏதோ, மெல்லிய குரலிற் கூறினார்; அமர்ந்தார்! அரசனை விளித்தார்.

"கோமானே! எட்டுத் தளபதிகளைக் கீழே வீழ்த்தி, பதினாறு வேற்படை வீரரின் ப்ற்களைத் தட்டிப்பறித்து, பழம்பெரும் போர்க்கலை ஆசானின் இடுப்பிலே, ஈராண்டும் தீராத வலி ஏற்படத்தக்கதான உதை கொடுத்து, கரிப்படைத் தலைவனின் கண்ணைக் கலங்கிடச் செய்த, வீராதிவீரன், குரலெடுத்துப் படை நடுங்கிட வைத்திட வல்லோனும் வெஞ்சமர்ச் சூரன், தங்களைக் காண வருகிறான்—கட்டளைக்குக் காத்திருக்கிறான் — அனுமதி அருள் வீரா?—என்று கேட்டான். மன்னன், "ஈதென்ன விந்தை! இத்துணை வீரச்செயல் புரிந்தோனை, யான் ஏன் இதுவரைக் காணவில்லை" என்று எண்ணிப் புலவரை நோக்கி, தளபதிகள் எண்மர், வேற்படையாளர் பதினாறு பேர், மற்றும் கரிப்படைக் காவலன், ஆகியோரைத் தாக்கியவனை — யார் அவன்? எங்குளான்? கொண்டுவந்து நிறுத்தும், அவனை, நம்முன் —தாமதமின்றி!" என்று முழக்கமிட்டான்.

பவனிக்கான இசை முழக்கம் எழும்பிற்று.

பராக்குக் கூறுவோர் பதின்மர் வந்து நின்றனர்.

பந்தல் அமைத்ததுபோன்ற பட்டுப் போர்வையைப் பலர் முறைப்படி ஏந்தி வந்தனர்.

மன்னன் எதிர்ப்புறம் அந்தப் பந்தற் போர்வை வந்தடைந்ததும், இனிக் காணீர், தளபதியின் பல் உடைத்து, வீரனின் விலாவை நொறுக்கி, கரிப்படையானை வீழ்த்திய, மாவீரனை!—என்று கூறிக், குறிகாட்டினான் புலவன்; போர்வையை நீக்கினர்; கோவேறு கழுதை ஒன்று, நின்றது, மன்னன் எதிரில்; மன்னன், இடிஇடியெனச் சிரித்து, "ஏடா! வீராதிவீரா! நீதானோ, புலவர் போற்றிய மாவீரன்! எட்டி உதைத்து இத்தனையையும் செய்ததன்றோ, நம் பாடிவீட்டுக் கொட்டிலில் கிடந்திடும் இக் கோவேறு கழுதை! பலே! பலே! எறி ஈட்டிக்கும், கொடுவாளுக்கும் அஞ்சாது போரிடும் என் தளபதிகள், இதனிடம் படாத பாடுபட்டனர்; பல் உடைபட்டனர்; ஆம்! புலவரே! ஆம்!"—என்று கூறிக் கூறிச் சிரித்தான் கோமான்; அவையினர் அனைவருமே, புலவர் செய்தளித்த நகைச்சுவை நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர்.

ஆடலும் பாடலும், அருங்கவிச் சுவையும், வீரமும் வெற்றிப் பொருட்களும் பெற்றளிக்க முடியாத பெருஞ் சிரிப்பை, கோவேறு கழுதை அளித்திட முடிந்தது.

* * *

முடி ஆட்சியிலே, மூதறிஞர்களாகவும், வெற்றி வீரர்களாகவும் விளங்கிய மன்னர்கள் இருந்தனர்—கொலைபாதகத்துக்கு அஞ்சாத கொடியவர்களும் கோலேந்திகளாகி இருந்தனர்—மடைமை மிக்கவர்களும், மன்னன் மகனானதால் மன்னனாயினர்!

கொடுமை புரிந்தவர்கள் கோல் முறிக்கப்பட்டது.

மடைமை கொண்டோரின் அரசு, மதியிலிகளின் மந்தகாசக் கூடமாகவும், நத்திப் பிழைப்போரின் புகலிடமாகவுமாகி, மக்களால் எள்ளி நகையாடப் பட்டது.

இந்நிலைக்கு முடி அரசு சரிந்ததும், முறை மாற்றியாகவேண்டும்—ஒருவனிடம், அதிகாரமத்தனையையும் ஒப்படைத்துவிட்டு, அவன் அறிவாற்றலுள்ளவனானால், அவதிக்கு ஆளாகாமல் இருக்கவும், கொடியவனானால் கேலிப் பொருளாகி இருக்கவுமான, நிலைமையைத் தாங்கித் தாங்கிப் பார்த்து. இனி இது ஆகாது என்ற முடிவுக்கு வந்த பிறகே, பேரறிவாளர் பலர் எண்ணிப் பார்த்து எடுத்தியம்பியது மக்களாட்சி முறை என்பது.

முடி ஆட்சிக் காலத்திலே, மன்னனிடம் மக்கள் அச்சத்துடன் அடங்கிக்கிடக்க நேரிட்டது; கொடுமை செய்யும்போது குமுறிச்சாக நேரிட்டது, மடைமைக் காரனாக இருக்கும்போது வெட்கப்பட்டுக் கிடக்க நேரிட்டது; எனினும், மன்னன் சரியில்லை, எனவே அவனை நீக்குவோம், வேறு தகுதியுள்ளவனை ஆட்சிப் பீடம் அமர்த்துவோம் என்று கூறிடும், ஆற்றலும் உரிமையும், மக்களிடம் இல்லை.

பெய்யெனப் பெய்யும் மழை வளமளிக்கிறது; பேய் மழை நாட்டை அழிக்கிறது. பூங்காற்று இனிமை பயக்கிறது, சூறைக்காற்று ஊர் அழிக்கிறது.

ஆனால், இயற்கையின் செயலைக் கட்டுப்படுத்த இயலாமல், மாமழை போற்றியும், பேய்மழை கண்டு துயருற்றும், பூங்காற்றுப் பெற்று இன்புற்றும், அழிவூட்டும் காற்றால் அவதியுற்றும், நாம் யாது செய்யவல்லோம்; இயற்கையை நாம் எங்ஙனம் கட்டுப்படுத்த இயலும்!—என்று எண்ணிக் கிடந்திடும் போக்கினர் போன்றே, மக்கள் முறை தவறும் மன்னன் முறை அறியா மன்னன் என்போர் ஆட்சி நடாத்தி, அவதியை மூட்டிய காலத்திலும், இயற்கை சிற்சில வேளைகளில் கொடுமையை ஏவுவதுபோல, ஆண்டவன், எக்காரணம் குறித்தோ நமக்குக் கேடு சூழ்ந்திடக் கொடுமையாளனைக் கோலேந்தியாக்கினான்; மடைமை மிக்கவனை மன்னனாக்கி மகிழ்கிறான்! நாம் எங்ஙனம், இதனைத் தடுத்திட முடியும்! எங்ஙனம் மாற்ற இயலும்! நமக்கு ஏது அந்த ஆற்றல்!!—என்று எண்ணிக் கிடந்தனர் நீண்ட காலம்.

கண்ணீர் முழுதும் வற்றிய பிறகு, கனல் பிறந்தது கண்களில்; தொல்லையின் எல்லைவரை துரத்தப்பட்ட பிறகு, துணிவு பிறந்தது நெஞ்சத்தில்; பிறகே, முடிஆட்சி முறை, திட்டவட்டமாக, இன்ன குணமுள்ளதாக இருக்கும், இன்ன பலன் தரும் என்று அறுதியிட்டுக்கூற இயலாததாகவும், மாற்றுஅமைக்க முடியாததாகவும் இருப்பதனால், அதனை நம்பி, மக்கள் தமது வாழ்க்கையை ஒப்படைப்பது கூடாத காரியம்—எனவே, மக்கள் கண்டறியத் தக்கதும், தேவைப்பட்டபோது மாற்றி அமைக்கத் தக்கதுமான ஓர் ஆட்சிமுறை வேண்டும்; நோக்கம் குறித்து அமைத்திடவும், எதிர்பார்த்த நலன் பெற்றளிக்க இயலாதுபோயின், மாற்றிடவும் தக்கதான ஆட்சி

முறை இருத்தல் வேண்டும், என்ற முடிவுக்கு மக்கள் வந்தனர்—குடி அரசு கண்டனர்.

தம்பி! குடிஅரசு கண்டனர், என்று மிகச் சுருக்க மாகக் கூறிவிட்டேன்—ஆனால் மிக நீண்ட, பயங்கரப் பயணம் நடாத்தியே மக்கள் குடிஅரசு கண்டனர்.

* * *

முடிஅரசு, கேடு பயப்பினும், மக்கள் தாங்கிக் கொள்ள வேண்டுமேயன்றி, மாற்றிவிட இயலாது.

குடிஅரசு, கேடு தந்திடின், மாற்றி அமைத் திடும் உரிமை மக்களுக்குக் கிடைக்கிறது.

முடிஅரசு, கோணல் வழி சென்றிடினும், கண் டித்துப் பேச, மக்களுக்கு உரிமை கிடையாது — உயிரைப் பற்றிய கவலை இருக்கும் வரை!!

குடிஅரசு, தவறு செய்வதாகத் தோன்றும் போதே, மக்கள் எடுத்துரைக்கலாம், கண்டிக்கலாம், எதிர்க்கக்கூடச் செய்யலாம்.

முடி அரசுக்கும், குடிஅரசுக்கும் இடையே உள்ளது இந்த வித்தியாசம், பல நூற்றுண்டுகள் சிந்தனையாளர்களும் வீரத் தியாகிகளும், அரும்பாடு பட்டு ஈட்டிய முறை, குடிஅரசு.

முடிஅரசுக் காலத்தில், மன்னனை மகிழ்விக்க வேண்டியது, தமது கடமை என்று கிடந்தனர் மக்கள்.

அந்த மகிழ்ச்சி, கதை காட்டினேனே, அதுபோல் கோவேறு கழுதையின் வீரம்பற்றி, நகைச்சுவை யுடன் எடுத்துக் கூறிக் களிப்பூட்டும் வகையின தாகத்தான் இருக்கும் என்பதல்ல பொருள்-மதியிலி மன்னனாக இருக்கும்போது இதுபோதும்! மமதை யாளன் மன்னனானாலோ, அவன் மனம், குடிமக ளொருவன் பெற்றெடுத்த செல்வத்தின் கற்பைச் சூறையாடுவதிலேதான் மகிழ்ச்சி பெறும் என்றால், அதுதான் நடக்கும்; மானமுள்ளோருக்குப் புகலிடம், சிறைக் கோட்டம், வெட்டுப் பாறை, அல்லது மரக்கிளை!

முடிஅரசுக் காலத்து முறை, மக்கள் மன்னனுக்கு மகிழ்ச்சியூட்டிப் பிழைத்துக் கிடப்பது.

குடிஅரசுக் காலத்திலோ, மக்களுக்கு மகிழ்ச்சியூட்டி, ஆளவந்தார்கள், இடம் பெற்றிருப்பர்.

பசிப்பிணி போக்கி, வளம் உண்டாக்கி, நல் வாழ்வு அளித்து, மக்களை மகிழவைக்கும், குடிஅரசு களும் உண்டு; ஒரே நாளில் அமைச்சர் என்பது ஊர் உலா வந்தார், உமக்காக!!—என்றுரைத்தும், உமக் காக இன்னின்ன திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்று ஏடு காட்டியும்; பசி கண்டு பதறுதீர்! பாலாறு தயாராகிறது, பாரீர்!! என்று புள்ளிவிவரம் வீசுவது மான வேடிக்கை காட்டியும் பொழுதை ஓட்டிடு வோர் நடாத்தும் குடிஅரசும் உளது.

கேடளிக்கும் முடிஅரசு மாற, முடிதரித்தோன் மாய்ந்திடல் வேண்டும்; ஆனால் கேடளிக்கும் குடி அரசை மாற்ற, மக்களுக்கு உரிமை இருக்கிறது—அறிந்து.

ஆற்றலுடன், அந்த உரிமையைப் பயன்படுத்த வேண்டும்; பயன்படுத்துவர் என்ற நம்பிக்கையினால் தான், குடிஅரசு முறையே வகுக்கப்பட்டது; பல நாடுகளிலே, இந்த நம்பிக்கை வீணாகிப் போகவு மில்லை.

* * *

தம்பி! ஒரு நாட்டை ஆள்வது என்பது எல்லோ ராலும் முடிகிற காரியமா...? அதற்கேற்ற அறிவாற் றல் அனைவருக்கும் ஏற்பட்டுவிடுமா? ஆண்டவன் யாரோ சிலருக்கு மட்டுமே, அத்தகைய தகுதியை அருள்கிறான். மன்னர்கள், மகேசனின் அருள் பெற் றோர்! அவனுடைய பிரதிநிதிகள்! என்று கூறப் பட்டது போய், எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று கூறிடத்தக்க காலம் இன்று பிறந்துவிட்டிருக் கிறது; என்றாலும், குடிஅரசு முறை ஏற்பட்டான பிறகு, எதிர்பார்த்ததனைத்தும் கிடைத்துவிட்டது என்று எவரும் கூறிவிடுவதற்கில்லை.

இது குடிஅரசுக் காலம் என்று குதூகலத்துடன் கூறிக் கொள்பவர்களை நோக்கிக் கேலி செய்து கொண்டல்லவா, ஸ்பெயின் நாட்டுப் பிராங்கோவும், போர்ச்சுகல் நாட்டு சலாசரும், உள்ளனர்! எகிப்து நாட்டு நாசரும், பிரான்சின் தெகோலும், இந்தோ னேசிய நாட்டு டாக்டர் சுகர்ணோவும், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் எனினும், சர்வாதி காரிகள் எனும் நிலையில்தானே உள்ளனர். பக்கத்து நாடான பாகிஸ்தானில், பட்டாளத்துத் தலைவர் தானே, ஆட்சி நடாத்துகிறார்.

இன்றைய உலகில், முடிமன்னர்களும் உள்ளனர், பிடியைப் பிரபுக்களிடம் விட்டுவிட்டு இருக்கும் முடி தாங்கிகளும் உள்ளனர்.

குடிஅரசுத் தலைவர்களும் உள்ளனர்; குடிமக்களை நல்லபடி நடத்திச் செல்ல நான் எல்லா அதிகாரத் தையும் ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்றுரைக்கும் சர்வாதிகாரிகளும் உள்ளனர்.

பாராளுமன்ற முறை மூலமே, குடிஅரசு முறை யிலே பக்குவம் ஏற்படுத்த முடியும்; அந்தப் பாராளு மன்ற முறைக்கு அடிப்படையாகத் தேவைப்படுவது, அரசியல் கட்சிகள் — அந்த முறைதான் இங்கு உள்ளது என்று கூறும் நாடுகள் உள்ளன; சோவி யத்தோ, அரசியல் கட்சிகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வது, நேரக்கேடு, வீணாட்டம்; அத் தகைய கட்சிகள், பணம் படைத்தோரின் உடைமை களாகிவிடுகின்றன; எனவே மக்களாட்சி என்பது வெறும் கேலிக்கூத்தாகி விடுகிறது; எனவே, இங்கு ஒரே கட்சிதான் உண்டு. அது மக்கள் கட்சி! ஒரே தேர்தல்தான்—அந்தக் கட்சி மட்டுமே ஈடுபடும் தேர்தல்—இதுதான் உண்மையான மக்களாட்சி! மற்றது போலி! புரட்டு! பகட்டு!—என்று செப்பு கிறது.

இது ஆட்சி, முறையிலே ஒரு வகை என்று கூறத்தக்கதேயன்றிப், பாராளு மன்ற ஆட்சி முறை ஆகாது என்று கூறிடும், அரசியல் தத்துவவாதிகள் நிரம்ப உள்ளனர்.

முடிஆட்சி, ஒரு அருள் பெற்ற குடும்பத்துக்கு மட்டுமே, ஆட்சி நடாத்தும் தகுதி, வழி வழி கிடைத்திடும் என்ற நிலையை, நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

குடிஅரசு முறையோ, கொல்லன் மகனாயினும், உழவனாயினும். சிறுகடை நடாத்துவோனாயினும், செருப்புத் தைப்போனாயினும்,—ஆட்சி நடத்திடும் ஆற்றலைப் பெற்றிட இயலும், என்ற நம்பிக்கை

யையும், அந்த உரிமை அவனுக்கு உண்டு என்ற நிலைமையும் ஏற்படுத்தித் தருகிறது.

* * *

எல்லோரும் இந்நாட்டு **மன்னர்** — என்பதிலே, மன்னர், என்ற வார்த்தை, ஆட்சி நடாத்தும் உரிமையைக் குறிக்க மட்டுமே, பயன்படுதல் வேண்டுமேயன்றி, மன்னன்பால், அருள் பெற்றேன், அமுல் நடத்துவேன், எது செயினும் முறையே என்று எவரும் இருத்தல் வேண்டும் என்ற மனப்போக்கை, மண்டைக் கனத்தைக் குறித்திடப் பயன்படுத்தப் படுமாஞல், குடிஅரசு முறை, கொடுமைகளை மட்டும் மூட்டுவதாக அல்ல, மடைமைப் படுகுழியில் மக்களைத் தள்ளிடும் மாபெரும் சதியாகிப் போகும்.

* * *

இந்த நிலையில் இன்று, நடைபெறும் அரசு முறை ஆகிவிட்டது என்றுதாஞே, என்னவோ, குடிஅரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத், மனம் வெதும்பியது போலவும், கேட்போர் மனம் புண்படும் முறையிலும், சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிருர். பத்ரிநாத் போய்வந்தவர், பாபம் போக, மார்க்கம் ஏதேனும் கூறுவார் என்று பலரும் எதிர்பார்த்திருப்பர்—ஆனல் பாபுவோ, இன்றுள்ள ஆட்சிமுறை பற்றி, கேலியும் கண்டனமும், வியப்பும் வேதனையும் நெளியும் விதமான கருத்துகளை வெளியிட்டிருக்கிருர்.

* * *

சட்டமன்றங்களில் அமர்ந்து, சட்டமியற்றுவோருக்கு, அதற்குத் தேவையான, அறிவாற்றல் இல்லை; அவர்களுக்கு உள்ள ஒரே ஒரு தகுதி, அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் என்பதுதான். அப்படித் தேர்ந்தெடுத்த மக்கள் யார் எனில், இவர்களைப் போலவே அறிவாற்றலற்றவர்கள்—என்ற கருத்துப்படப் பேசிவிட்டார்.

குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடுவதுபோல என்பார்களே, அதுபோல, இன்று ஆட்சிமுறை இருப்பதாக, அவர் கருதுகிருர்.

இவ்விதமான கருத்துக்கொண்டுள்ள, இவரே, குடிஅரசுத் தலைவராக இன்று அமர்ந்திருப்பது, கேலிக்குரிய, கண்டிக்கத்தக்க, தரம் கெட்ட ஒரு அரசியல் முறையின் மூலமாகத்தான் என்பதை அவர் மறந்துவிட்டிருக்க முடியாது, சிலராகிலும் இதைச் சுட்டிக் காட்டுவார்களே என்பதைத் தெரிந்திருந்தும் தான், குடிஅரசுத் தலைவர் அவ்விதம் பேசியிருக்கிருர். பேசியதோடு நிற்கவில்லை. சட்டமன்றங்கள் செல்வதற்குச் சில தகுதிகள் இருத்தல் வேண்டும்; சில தகுதிகளைக் குறிப்பிட்டு, அத்தகுதிகள் உள்ளவர் மட்டுமே சட்ட மன்றங்கள் செல்லலாம் என்று முறை ஏற்படுத்துவது மிக நல்லது என்றும் எடுத்துக் காட்டி இருக்கிருர்.

மிக உச்சிக்குச் சென்று அமர்ந்து கொண்டவர்களும், சட்ட மன்றம் போன்ற இடங்கள் செல்வது தமது தகுதிக்குக் குறைவு என்று கருதுவோரும், சட்டமன்றம் போன்ற இடங்களுக்குச் செல்ல முடியாது கிடப்போரும், செய்திடும், 'உபதேசம்' இது என்று மட்டும், பாபுவின் பேச்சைக் கொள்வதற்கு இல்லை.

முன்பொரு முறை, இப்போது இருந்துவரும் எல்லோரும் ஓட் அளிக்கும் முறை இனியும் நீடிக்க வேண்டுமா? அதைவிட, மறைமுகத் தேர்தல் முறை இருப்பது நல்லதல்லவா?—என்ற கருத்துப்பட, நேரு பண்டிதர் பேசி இருக்கிருர்.

குடிஅரசுதான் சிறந்தது. ஆனல் அது கட்சிகளற்ற குடிஅரசாக இருக்கவேண்டும்—ஆனல் அதே போது சர்வாதிகாரமும் கூடாது. சோவியத் முறையும் ஆகாது!—என்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறி வருகிருர்.

பெரியார், பலமுறை பேசியிருக்கிருர், இராஜாவே ஆண்டால் என்ன? சர்வாதிகாரி இருப்பதுதான் நல்லது!—என்றெல்லாம்.

அவர், இந்த நாடு பற்றியும், ஆட்சி பற்றியும் என்ன கருதுகிருர் என்பதை அறிந்துகொள்ள அவர் பன்முறை பேசி இருக்கிற ஒரு கருத்தைக் கவனித்தாலே போதும்;

> "இந்த நாட்டை எவன் ஆண்டால் என்ன? இந்த நாட்டை ஒரு ஜதை செருப்பு ஆண்டிருக்கிறது, 14 வருஷங்கள்"

—என்று பேசி இருக்கிருர்.

இதைக் கவனிக்கும்போது, அவர், இந்த நாட்டு மக்களுடைய போக்கைக் குறித்துக் கொண்டுள்ள வெறுப்புத்தான், அவரை அவ்விதம் பேசவைக்கிறதேயன்றி, ஆட்சி முறைகளிலே, எது சிறந்தது, எது தரமானது என்று எண்ணிப் பார்த்து அவர்

ஏதும் கூறுவதாகத் தெரியவில்லை என்பது விளக்க மாகிறது.

*　　*　　*

பாபு இராஜேந்திரர் போன்றவர்கள், இன்று, சட்டம் இயற்றும் போக்குக் கண்டு கசப்புற்று, இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது சட்டம் இயற்ற என்று பேசுவது, என்ன காரணத்தால்? அவர்களுக்குப் பிடித்தமற்ற முறையிலே, சட்டங்கள் இன்று நிறைவேற்றப்படுகின்றன, என்ற கசப்பா? அல்லது, இன்று சட்டமியற்றும் பொறுப்பும் உரிமையும் பெற்றுள்ள தமது கட்சியினர், இனி அந்த நிலையினின்றும், விரைவிலே தள்ளப்பட்டுப் போவார்கள்; அவர்களைக் காப்பாற்ற வேண்டுமானால், யார் வேண்டுமானாலும் சட்டமன்றத்துக்குச் செல்லலாம் என்ற முறையையே மாற்றிவிட வேண்டும் என்று எண்ணுகிறாரா!

சட்டமன்றம் செல்வதற்குச் சில தகுதிகள் இருக்கவேண்டும் என்பது முறையானல், சட்டமன்றத்துத் தேர்தலில் ஈடுபட்டு, 'ஓட்' அளிக்கவும், சில தகுதிகள் இருக்க வேண்டும், அல்லவா? அதாவது, வயது வந்த எல்லோருக்கும் 'ஓட்டு' என்ற முறை இருக்கக்கூடாது என்று ஏற்படுகிறது. அப்படியாகுமானல், நாடு, வெள்ளைக்காரர்கள் ஆட்சி நடத்தி, முணுமுணுத்துக்கொண்டே, சிறிது சிறிதாக அரசியல் உரிமைகளை மக்களுக்கு அளித்தார்களே, அந்தப் பழைய காலத்துக்கன்றோ இழுத்துச் செல்லப்படும்! அதனைத்தானே, ஐம்பது அறுபது ஆண்டுகளாக **எதேச்சாதிகாரம், பிற்போக்கு அரசியல்,** என்றெல்லாம் பாபுவின் சகாக்கள் கண்டித்தனர்.

இப்போது, எதேச்சாதிகாரமும், பிற்போக்கு அரசியல் முறையும்தான் தேவை, என்ற முடிவுக்குக் காங்கிரஸ் வந்துவிட்டது என்பதைத்தான் பாபுவின் பேச்சு முன்கூட்டியே அறிவிக்கிறதோ என்ற அச்சம் எவருக்கும் ஏற்படத்தான் செய்யும்.

சுதந்திரம் பெற்ற உடன். எமது காங்கிரஸ் கட்சிதான், எல்லா மக்களுக்கும் ஓட்டுரிமை வாங்கிக் கொடுத்தது என்று மார் தட்டிக்கொள்ளும் காங்கிரஸ், இனி வெகு விரைவில், கொடுத்த ஓட்டுகளைப் பறித்துக்கொண்டு, எதேச்சாதிகார அரசியல் முறையை அமுல் நடத்தப் போகிறதோ, என்னவோ, யார் கண்டார்கள்!

எகிப்து நாட்டிலே, படைபலம் காட்டி, ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நாசர் நல்லவர், திறமை மிக்கவர், இலட்சியவாதி—எல்லாம் உண்மை. ஆனல், அவர், நான் பார்த்து, ஒத்துக்கொள்வது மட்டுமே அரசியல் கட்சி என்ற உரிமையைப் பெற முடியும்—மற்றவை தலைகாட்டக்கூடாது என்று கூறிவிட்டார்.

அவருடைய சொல்லே சட்டம்! ஏனெனில், அந்தச் சொல்லுக்கு வலிவளிக்கப், பெரும்படை தயாராக இருக்கிறது.

அவர் போன்றே, இந்தோனேசிய அதிபர் சுகர்னோவும், அரசியல் கட்சிகளுக்கு, இன்னின்ன இலக்கணம் இருக்கவேண்டும்; இவ்விதம் நடந்துகொள்ள வேண்டும்; இல்லையென்றால், அந்தக் கட்சிகளின் சீட்டுக் கிழிக்கப்பட்டுவிடும், என்று அறிவித்துவிட்டார்.

உரிமைகள் பற்றிய ஆர்வமற்றவரோ, டாக்டர் சுகர்னோ' இல்லை! நிரம்பப் பேசி இருக்கிறார், ஐக்ய நாடுகள் மன்றத்திலே!!

தம்பி! இந்தப் பெரும் தலைவர்களின், வியப்பூட்டும் பேச்சுக்களைப் பார்க்கும்போது, இவர்கள் ஒவ்வொருவரும், தமக்கு எவை சாத்தியமோ, பிடித்தமோ, அவை மட்டுமே, மக்களுக்கு நல்லாட்சி ஏற்படுத்தித் தரத்தக்கன; மற்ற எல்லா முறைகளும், தீது பயப்பன; எனவே, தேவையற்றன; நீக்கத் தக்கவை என்று கருதுகிறார்கள் என்பது மிக நன்றாகத் தெரிகிறது.

உலகப் பெருந் தலைவர்கள் கூடிப். போர்க் கருவிகளை ஒழித்திட. மாநாடு நடாத்துகிறார்களே, தம்பி! கூர்ந்து பார்த்தால், ஒவ்வொரு தலைவரும், தம்மிடம் இல்லாத போர்க் கருவிகள், உலகிலே மற்ற எவரிடமும் இருத்தல் கூடாது; தமக்கு சாத்யமாகாத எந்தப் போர் முறையும் திட்டமும், உலகிலே மற்ற எவரிடமும் இருத்தல் கூடாது, என்பதைத்தான், மிகச் சாமர்த்தியமாகப் பேசி வருவது புரியும்.

1932ல் ஜெனிவா நகரில், போர்க்கருவிகள் ஒழிப்புக்கான மாநாடொன்று நடைபெற்றது. சோவியத் நாட்டு லிட்வினுப், இப்போது குருஷேவ் வலியுறுத்தியது போலவே, போர்க் கருவிகள் ஒழிக்கப்படவேண்டும் எனற திட்டம் கொடுத்துப் பேசினர்.

அப்போது, ஸ்பெயின் நாட்டிலிருந்து வந்திருந்த மாட்ரியாகா என்பவர் ஒரு கதை கூறினர்.

காட்டிலே உள்ள மிருகங்களெல்லாம் கூடி, ஒன்றை ஒன்று கொன்று குவித்திடும் கொடுமையை ஒழிக்க வழிவகை என்ன என்று மாநாடு நடத்தின. காட்டரசனான சிங்கம், கெம்பீரக் குரலில், கழுகைப் பார்த்தபடி, நாமெல்லாம் கூர்மையான மூக்குகளை ஒழித்திடவேண்டும், என்று கூறிற்று; புலி யானையைப் பார்த்தபடி, ஒழிக்கப்படவேண்டியது தந்தங்கள்! என்றுபேசிற்று; யானையோ, புலியைப்பார்த்துக்கொண்டே, கோரமான பற்களையும் கூரான நகங்களையும் ஒழித்தாக வேண்டும்என்று முழக்கமிட்டது. இப்படி ஒவ்வொரு மிருகமும், தன்னிடம் எது இல்லையோ எதைவைத்துக்கொண்டு. மற்ற மிருகங்கள் கொல்லும் வலிவு பெறுகின்றனவோ, அவைகளை ஒழித்து விடவேண்டுமென்ற நோக்கத்துடன் பேசின. கடைசியாகக், கரடி எழுந்தது, கனிவுடன், கொல்லும் செயலுக்குப் பயன்படும், எல்லாமே ஒழிக்கப்படத்தான்வேண்டும்—கொடியவாய், கூரானநகம், நீண்ட கூரியமூக்கு — எல்லாம் — புவியெங்கும் இருந்து வருகிற, கட்டித் தழுவிக்கொள்ளும் முறைதவிர, மற்றதெல்லாம், ஒழிக்கப்பட்டாகவேண்டும், என்று கூறிற்று.

தம்பி' கரடி, கட்டிப்பிடித்தே மற்றதைக்கொல்ல வல்லது. எனவே, கரடி, அதுமட்டும் இருக்கவேண்டும், மற்றவை ஒழியவேண்டும், என்று பேசிற்று. என்பதாகக் கூறினர் ஸ்பெயின்நாட்டுக்காரர்.

அது, சோவியத்தைக் கிண்டல் செய்யப் பேசப் பட்டது.

ஆனால், இதிலே தொக்கி நிற்கும் உண்மை, ஒவ்வொருநாடும் மற்றநாட்டுக்கு வலிவு எதுவோ, அதை ஒழிக்கவே, போர்க்கருவி ஒழிப்பு மாநாடு நடத்துகிறது என்பதுதான்.

போர்க்கருவிபற்றி மட்டுமல்ல, ஆட்சி முறை பற்றியும், பெரும் தலைவர்கள் பேசுவர், இஃதே போன்ற நோக்குடையதாகவே இருந்துவரக் காண்கிறோம்.

நோக்கம் இருக்கட்டும், இந்தப் பேச்சுப்பேசஏன் முன்வந்தனர், பாபு போன்றோர்! மக்கள், குடி அரசு முறையிலே அடியோடு நம்பிக்கை இழந்துவிடவில்லையே தவிர, எதிர்பார்த்த பலன், நலன், குடிஅரசு முறைமூலம் கிடைக்கக்காணோமே என்ற ஏக்கமும் திகைப்பும், மக்கள் மனதிலே வேகமாக வளர்ந்த வண்ணம் இருக்கிறது.

அதனைத் தெரிந்துகொண்டே பெருந்தலைவர்கள் இதுபோலப் பேசத் தலைப்பட்டுள்ளனர்,

மக்களுக்குத், திகைப்பு ஏற்பட்டிருப்பதற்கும் காரணம் நிரம்ப இருக்கிறது.

எந்தக் குடி அரசு முறைப்பற்றி விழாக் கொண்டாடி, மக்களை, ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே! என்று பாடி, ஓட்டு வாங்கி, ஆட்சிநடத்தத் தொடங்கினார்களோ, அந்தக் காங்கிரசார் ஆட்சியிலே, வெள்ளைக்கார ஆட்சியிலே, நடைபெற்றதைவிட, அளவிலும் வகையிலும் அதிகமான அடக்குமுறை அவிழ்த்துவிடப்படுகிறது;

உலகுக்கே, சாந்திபோதனை பேசிவிட்டு, ஊர் திரும்புகிறார், நேரு பண்டிதர்; அவர் ஆட்சியிலே என்ன நடக்கிறது; எதைக்கண்டார்?

சிறையில் அடைக்கப்பட்ட அகாலியர், கலகம் செய்தனர் என்பதற்காகச், சிறையிலே சுட்டுத் தள்ளப்பட்டனர்.

வரியோ ஏறியபடி இருகிறது; கடன் பளுவோ, கழுத்தை நெறிக்கும் அளவுக்கு; சட்டங்களோ, தொழிலாளரின் உரிமைகளைப் பறிக்கும் விதத்தில்! செல்வவான்களுக்குத் தரப்படும் சலுகைகளோ, அவர்களே வெட்கப்படும் அளவிலும், முறையிலும்! விலைவாசியோ விஷம்போல் ஏறியபடி! நிர்வாகத்தில் ஊழல்களோ, நாற்றமெடுக்கும் அளவுக்கு!

> என்றாலும், தம்பி! மீண்டும் மீண்டும் இத்துணை கேடுபாடுகளைச் செய்திடும் காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் வெற்றி கிடைக்கிறது.

இதைக் காணும்போது மக்களுக்கு, திகைப்பும், குடி அரசு முறை மீதே ஒருவிதமான அருவருப்பும் ஏற்படத்தானே செய்யும்.

> என்ன தேர்தல்!
>
> என்ன சட்டசபை!
>
> என்ன குடி அரசு!
>
> எந்த அரசு வந்தும் நமது கஷ்டம் போகக்காணோம்.

என்று மக்கள் மனம் குமுறிப் பேசுகினறனர்.

* * *

பேசுகின்றனர், திகைப்படைகின்றனர், திகில் கூடக் கொள்கின்றனர்; ஆனால், கேடுபாடு நிறைந்த காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்தும், உரிமையும் ஆற்றலும், குடிஅரசுக் கோட்பாட்டின் மூலம், தங்களிடம், தரப்பட்டிருக்கிறது, என்பதை மட்டும் தெளிவாக உணர மறுக்கின்றனர்.

விழிப்புடனிருத்தல், குடிஅரச வெற்றி பெற மிக மிகத் தேவை.

விழிப்புடன் இருக்கும் நிலையில் உள்ள மக்களையே, குடிஅரசு முறையையும் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும், பணம் படைத்தோர், மறுக்கவும், மிரட்டவும் முடிகிறது என்றால், விழிப்புணர்ச்சியே அற்றுக் கிடக்கும் மக்களிடம், ஆதிக்கக்காரர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்!

மக்களை, மிரட்டவும் மயக்கவும் எளிதாக முடிகிறது என்று தெரியும்போது, சீமான்கள், குடிஅரசு முறையையே குத்தகைக்கு எடுத்துக்கொள்ள முடிகிறது.

நாம் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்துகொண்டு, அதற்கு விளக்கம், இதற்குச் சமாதானம், இந்தக் கணக்கு அந்த விவரம், என்றெல்லாம் காட்டிக்கொண்டும், எதிர்ப்பாளர்களுடன் மல்லுக்கு நின்றுகொண்டும் கஷ்டப்படுவானேன்; நமது 'பாகார்டு' ஓட்ட நல்ல ஆளை அமர்த்திக் கொள்வதுபோல, நமது நலனைப் பாதுகாக்கும் முறையிலே ஆட்சி நடத்த, தக்கவர்களைத் தட்டிக் கொடுத்து, வேலை வாங்கினால் போதாதா! — என்ற முறையிலேதான் கோடீஸ்வரர்கள் உள்ளனர்.

> ஐந்து கோடி ரூபாய் செலவிட்டுத்தான் போன பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது என்பதைக் காங்கிரஸ் அமைச்சரே, வெட்கமின்றி ஒப்புக்கொண்டிருக்கிறார்.

மக்கள் 'ஓட்' அளிக்கிறார்கள்; சீமான்கள் 'நோட்' அளிக்கிறார்கள். ஓட் அளித்த மக்களுக்காக, முற்போக்கான சட்டங்களை இயற்றுவோம். நோட் அளித்த சீமான்களுக்காக, அந்தச் சட்டத்திலே, நிறையச் சந்துபொந்துகளை ஏற்படுத்திக் கொடுப்போம். திடலில் தீவிரம் பேசுவோம்—அது மக்களுக்குத் தரும் தித்திப்பு! மாளிகைகளிலே, சீமான்களிடம், வேண்டுகோள் விடுப்போம்—அது இலட்சங்கள் பெற!!

இந்த முறையில்தானே தம்பி! காரியம் நடக்கிறது.

> மக்களே! உங்கள் வாழ்வு வளம்பெறப் புதுப் புதுத் தொழில்களை அமைக்கிறோம் என்று திடலில் பேசுகின்றனர். மாளிகைக்காரரிடமோ, தொழில்களை நடத்த, இன்னின்ன வசதிகள், சலுகைகள், வாய்ப்புகள், தருகிறோம், பெற்றுக்கொள்க என்று பேசுகின்றனர்.

ஐயன்மீர்! திட்டம் திட்டம் என்று பேசுகிறீர். புதுப் புதுத் தொழில் வளர்ப்பதாகக் கூறிக்கொண்டு முதலாளிகளைத் தானே கொழுக்கவைக்கின்றீர். என்று கேட்டுவிட்டாலோ, மூக்குச் சிவந்துவிடுகிறது அமைச்சர்களுக்கு. அப்படியானால், தொழில் வளர வேண்டாம் என்கிறீரா! மக்கள் வறுமையிலேயே வாடட்டும் என்கிறீரா!—என்று பேசி, மக்கள்மீது மாயவலை வீசுகிறார்கள்.

தம்பி! ஒரு தகவல் பார்த்தேன், ஏதோ ஒரு இதழில்! தனிப்பட்ட முதலாளி, சுயராஜ்யத்திலே தன் ஆதிக்கத்தை எந்த அளவு பெருக்கிக்கொள்ள முடிந்திருக்கிறது, என்பதற்கான தகவல், திகைத்தே போனேன், சொல்கிறேன், கேட்கிறாயா, திகைப் படையாமல், காங்கிரஸ் கட்சிக்கு மெத்த வேண்டியவர் அல்லவா, பிர்லா! அவருடைய மாளிகையில் தானே காந்தியாரே, சுட்டுக் கொல்லப்பட்டார்!! அவருடைய தர்மாலயங்கள், என்னென்ன தெரியுமா! குமரி முதல் இமயம் வரை என்கிறார்கள் அல்லவா—அது இவரைப் பொறுத்தவரையிலே, முற்றிலும், உண்மை.

ஹென்றி கெய்சர் எனும் அமெரிக்கக் கோடீஸ்வரருடன் கூட்டாகச் சேர்ந்து, உத்தரப் பிரதேசத்தில், மிகப் பெரிய அலுமினியத் தொழிற்சாலையைத் துவக்கி இருக்கிறார்.

தம்பி! இங்கே ஏன், தொழிற்சாலை அமைக்கக் கூடாது என்று நாம் கேட்கும்போது, படிக்காத மேதையும் படித்த மேதையும் சேர்ந்துகொண்டே, பதில் கூறுகின்றனர், நினைவிலிருக்கிறதா—கண்ட கண்ட இடத்திலே தொழிற்சாலைகளை ஆரம்பித்து விட முடியுமா! தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள் கிடைக்க வேண்டாமா? மூலப் பொருள் எங்கு கிடைக்கிறதோ அங்கு தொழில் வளரும். இதுகூடத் தெரியவில்லை, இந்தத் தி. மு. க. - வுக்கு என்று பேசிக் கெக்கலி செய்கின்றனர்.

ஆனால், தம்பி! பிர்லா, அமெரிக்கக் கூட்டுடன், உத்தரப் பிரதேசத்தில் அமைக்கிறாரே, அலுமினியத் தொழிற்சாலை, அதற்கு மிக மிகத் தேவைப்படுவது பாக்சைட்! அந்தப் பாக்சைட் உத்தரப் பிரதேசத்தில் இல்லை. மத்திய பிரதேசத்திலிருந்து. 400 கல் தொலைவிலே இருந்து, கொண்டுவரப்பட வேண்டும்!!

இதைச் சொல்லிப் பார், காமராஜரிடம், "போ! போ! அலுமினியமாவது காரியமாவது! இங்கே வேண்டியது சோறு!" என்று அழகாக, எந்த நாட்டு அமைச்சரும் இதுவரை சொல்லாத முறையில், கூறுவார்.

பிர்லாவின் தொழிற்சாலை, உத்தரப்பிரதேசத்தையும் மத்தியப் பிரதேசத்தையும் இணைக்கிறது.

டெல்லியில், பிர்லா பஞ்சாலை!

பம்பாயில், பிர்லாவுக்கு சென்ச்சரி நூற்பாலை.

குவாலியரில், அவருக்கு, ஜீவாஜீராவ் பஞ்சாலை.

கல்கத்தாவில், ஜெயஸ்ரீ கேசராம் பஞ்சாலை.

மத்யபிரதேசத்தில், குவாலியர் பட்டு நூல் ஆலை.

ஆமதாபாத்தில், புதிய சுவதேசி ஆலை.

ஹைதராபாத்தில், சிர்சிம்க் எனும் ஆலை.

பிர்லா சணலாலை, ராமேஸ்வர் சணலாலை, பாவி சணலாலை, சூரா சணலாலை, இத்தனையும் கல்கத்தாவில்.

ஜாம் நகரில், திக்விஜயா, கம்பளி ஜவுளி ஆலை.

கல்கத்தாவில், நெசவாலையந்திர உற்பத்திசாலை.

★★★★★★★★★★★★★★★★★★★★

எட்டியும் எத்தரும்

— பாவலர். எழிற்கோவன் —

எட்டியின் பழத்தைக் காட்டி
இழித்திடும் மனிதக் காட்டின்
பட்டியல் பாருக் காக்கும்
பழிநிலை பகுத்துப் பார்ப்பின்;
திட்டிடும் எட்டிக் காயே
மேலெனுந் திண்ணக் கூற்றை
நட்டிடும் நாசக் கூத்தர்
நாடெலாங் கூடல் நன்றோ?

பயனிலா எட்டிப் பேராய்ப்
பழுத்தது நிறைந்திட்டாலும்
நயமுறுங் காற்றின் ஓட்டம்
நனிவுறப் பெருகி யோங்க
செயலுறும் மரத்தின் தன்மை
செழித்தலின் பெருமை யேந்தி
வெயிலிலே களைத்தோர் வேண்டும்
விடைகுடை நிழலை யீயும்!

எத்தராய்ப் பெருகி நிற்கும்
எட்டியர் இவர்கள் கூற்றோ
சத்தியராகத் தம்மைச்
சாட்டியே நம்பச் செய்யும்
சித்தராய்க் குமுகா யத்தைத்
சிதறவைத் தாக்கிச் சீறிக்
கொத்திடும் நச்சுப் பாம்பின்
கொடைகடைப் பிடிக்கின்றார்கள்!

எட்டியின் வித்திற் கூடி
இயங்கிடும் நச்சைக்கூட
வெட்டியே விழுங்கி வாழும்
வினையுனர் காணுகின்றோம்!
எட்டியர் இவரின் நச்சோ
எதனினும் பெரிய நச்சாய்க்
கொட்டிடுங் கொழுப்பாய் நேர்ந்து
கொடுத்திடுங் கொடுமை யன்றோ!

பிறப்பிலே இவர்களோடு
பிறந்திணைந் தோங்கிநேரும்
பிறரினைச் சுரண்டும் வஞ்சப்
பிழைப்பினின் வன்மை மாய்க்குந்
திறத்தினைத் தினிக்கும் வீரத்
தீரரை எட்டி என்பார்!
அறத்தினைப் பொசுக்கி வாழும்
ஆணவக் கடலாய் உள்ளார்!

இத்தனை கொடுமை யெல்லாம்
இழிவுற வாக்கி நிற்கும்
பொத்தலின் உள்ளங் கொண்ட
போரியற் குமுகா யத்தின்
வித்திழைக் கூற்றின் மேலாய்
விளைந்திடும் நலனை நேர்த்தல்
உத்தம எட்டி என்பேன்!
உலகரே! திருந்துவீரே!

★★★★★★★★★★★★★★★★★★★★

கிம்கோ, என்ற பெயரில், குவாலியரில், பாரத்பூரில் தொழிற்சாலைகள்.

கல்கத்தாவில், புதிய இந்தியா, மேல் கங்கை, பாரத்பூர், அவுத், புது சுவதேசி, கோவிந்து, என்று இத்தனை பெயர்களில் சர்க்கரை ஆலைகள்.

பெப்பர்மின்டு தொழிற்சாலை, கல்கத்தாவில்.

வனஸ்பதி, துங்கபத்ரா தொழிற்சாலை, பேரார் சுவதேசி வனஸ்பதி, சர்க்கரை ஆலை யந்திர உற்பத்திச்சாலை, ஓரியன்ட் காகிதத் தொழிற்சாலை, இவ்வளவும் வங்காளத்தில்.

ஹைதராபாத்தில், சிர்பூர் காகித ஆலை.

ஓரியன்ட் மின்சார விசிறித் தொழிற்சாலை கல்கத்தாவில்.

பம்பாயில், ஹின்ட் சைகல் தொழிற்சாலை.

கல்கத்தாவில், இந்துஸ்தான் மோடார் தொழிற்சாலை.

ஜெய்பூரில், தேசிய உருளைகள் தயாரிப்புத் தொழிற்சாலை.

பம்பாயில், உருக்கு உலை.

கல்கத்தாவில், யந்திரச் சாமான்கள் தயாரிப்புத் தொழிற்சாலை; ரேடியோ, பிளாஸ்டிக் தொழிற்சாலைகள், மருந்துவகை தயாரிக்கும் தொழிற்சாலை, இவ்வளவும்.

போர்பந்தரில், சோடா உப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை.

தேடத்தேடத், தகவல்கள் நிறையக் கிடைக்கும். கிடைத்தது?

காங்கிரசாட்சி கனதனவான்களுக்குக் கரும்பாக இனிப்பதிலே வியப்பு என்ன?

இத்தனை, விதவிதமான தொழிற்சாலைகளை நடத்தும், பிர்லாவுக்கு, மூலதனம், வெளிநாட்டுக் கடன், வெளிநாட்டு யந்திரம், இவ்வளவும் தேவைப்படும் அளவுக்குக் கிடைக்கிறது; தொழில் தழைக்கிறது. காங்கிரசாட்சியின் துணையின்றி எப்படி இப்படிப் பட்ட 'ராஜ்யத்தை' ஒரு பிர்லா அமைத்து, ஆண்டிட முடியும்.

காங்கிரசாட்சியின் துணை இவ்வளவுக்கும் தேவைப் படும்போது, தேர்தலிலே, காங்கிரசை வெற்றிபெறச் செய்வதிலே, பிர்லாவுக்கு அக்கறை எப்படி ஏற்படாமல் போகும். அந்த அக்கறை, கோடிகளாகின்றன! கோடிகள் இருப்பதால் கோணல் ஆட்சி நடாத்திடினும், மக்களை மயக்கி, மீண்டும் பீடம் ஏறக் காங்கிரஸ் கட்சியால் முடிகிறது.

குடி அரசு மக்களின் நலனைக் காத்திடும் அரசாகாமல் இருக்கிறது என்றால், தம்பி! காரணம் இப்போது புரிகிறது அல்லவா?

பலப்பல கோடி ரூபாய்கள், திட்டங்களின் பெயரால் செலவிடப்படுகின்றன; இதிலே பெரும்பங்கு தனிப்பட்ட முதலாளிகளுக்குத்தான் சேருகிறது; அவர்கள் தொழில் வளர, இலாபம் பெருக.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 233 கோடி ரூபாய், தனியார் துறைக்கு ஒதுக்கினீர்களே — இதிலே, பல தொழில்களை அமைத்துக்கொண்டு, ஏகபோக பாத்யதை கொண்டாடும் 20 பெரிய தொழிலதிபர்களிடம் போய்ச்சேர்ந்தது எவ்வளவுதொகை? பரவலாகத் தொழில் வளரச், சிறு முதலாளிகளுக்குப் போய்ச் சேர்ந்தது எவ்வளவு தொகை?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, தனியார் துறைக்கு 570 கோடி ரூபாய் ஒதுக்குகிறீர்களே, இதை எப்படிப் பகிர்ந்தளிக்கப் போகிறீர்கள்.

தொழில் உலகில், வல்லரசு அமைத்துக் கொள்ளப் பெரிய முதலாளிகளால் முடிகிறது! அதைத் தடுத்து நிறுத்த உங்களால் முடியவில்லை.

தொழிற்சாலை அதிபர்கள், மேலும் மேலும் வலிவு அடைகிறார்கள் ஆதிக்கம் பெறுகிறார்கள்."

என்று அசோக்மேத்தா பாராளுமன்றத்திலேயே பேசினார். பேசி? நான் எப்போதாவது எடுத்துச் சொன்னால்தான் வெளியே தெரியுமே தவிர, இந்துவும், மெயிலும், இன்னபிற இதழ்களும், இதனையா எழுதி மக்களுக்கு உண்மை நிலையைத் தெரியச் செய்திடும்! பத்திரிகைகள் மட்டும் என்ன—சூளைக்கல்லும் பிடாரிதான் என்ற பழமொழிப்படிதானே!

தம்பி! அரசு முறை, எவ்விதம் இருப்பினும், குடி அரசு ஆகட்டும், முடி அரசு ஆகட்டும், இங்கிலாந்தில் உள்ளதுபோல குடிக் கோனாட்சியாகட்டும், முறை எவ்விதம் இருப்பினும், தொழிலதிபர்களிடம் சிக்கிக் கொண்டால், தீர்ந்தது—ஆட்டிவைக்கிறபடி ஆடும், நீட்டிய இடத்தில் கையெழுத்திடும்!

குடி அரசு முறையையும் வைத்துக்கொண்டு, சமுகத்திலேயும், தொழில் உலகிலேயும் ஆதிக்கக்காரர்களுக்குப் பிடி இருக்கும்படியும் அனுமதித்து விட்டால், புத்தியுள்ள ஒரு மன்னனேகூடக், குடி அரசுக் கோட்பாடு பேசும், அமைச்சர்களை ஆட்டிப் படைக்க முடியும்.

அடுத்த கிழமை அப்படிப்பட்ட ஒரு மன்னனைக் காணலாம்.

அண்ணன்,

அண்ணாதுரை

தொழில் வளர்ச்சிக்குத் தடை யாக இருப்பது மத்திய அரசே!

சட்டப் பேரவையில் அமைச்சர் மாதவன் விளக்கம்!!

"மத்திய அரசு ஒரு நிலையான பொருளாதாரக் கொள்கையை வகுத்துக் கொண்டு செயலாற்ற வேண்டும்; இதில் ஒரு நிச்சயமற்ற தன்மை இருத்தல் கூடாது; நாட்டில் தொழில் வேகமாகப் பெருகாததற்கு இதுவே காரணமாகும்.

"தமிழ்நாட்டுத் தொழிற்சாலைகட்கு 1968-69-ஆம் ஆண்டில் 1,15,000 டன் இரும்பு - எஃகுத் தேவையென்று கேட்டோம்; ஆனால் மத்திய அரசு ஒதுக்கியதோ 3,136 டன்களேதான்: 1971 72-ஆம் ஆண்டில் நமக்குத் தேவைப்பட்டது 2,10 000 டன் எஃகாகும்; ஆனால் கிடைத்ததோ 37,284 டன்களேயாகும்; மத்திய அரசு சீரான வகையில் மூலப்பொருட்களை பெற்றுத் தருவதில் தவறுகிறது; நமக்குத் தேவையானவற்றை மத்திய அரசு சுணக்கம் இல்லாமல் வழங்க வேண்டும்.

"ஏராளமான இரும்புக் கனிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன; ஆனால், உள்நாட்டில் நமக்குத் தேவையானவற்றை வழங்க மத்திய அரசு முன்வரவில்லை.

"பொருளாதாரக் கொள்கையில் திடமான நம்பிக்கை இருந்தால்தான் நாம் முன்னேற முடியும்; மத்திய அரசின் அனுமதி வழங்கும் கொள்கை எந்த அளவுக்கு இருக்கிறது—எந்த அளவுக்கு மூலப் பொருட்களை மாநிலங்கட்குப் பகிர்ந்து அளிக்கிறார்கள்' என்பதைப் பொறுத்துத்தான் ஒரு மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படும்.

"மாநிலங்களின் மூலப் பொருள் தேவைகளைப்பற்றிஅந்தந்த மாநில அரசுகளும்-மத்திய அரசும் ஒன்றாக இணைந்து மதிப்பிட்டு அறிவது அவசியம்; மாநில அரசு கேட்டபடி மூலப்பொருட்களைக் கொடுக்க வேண்டும்; மாநிலங்கட்கு என்னென்ன தேவை என்பதுபற்றியும் மத்திய அரசு ஆராய வேண்டும்; மத்திய அரசிடம் நாங்கள் இந்தக் கருத்தை வலியுறுத்தி வருகிறோம்."

சேலம் இரும்பாலை

"சேலம் உருக்காலை தொடர்பாக அந்த மாவட்ட மக்கள், தாங்களாகவே தங்களது நிலத்தைக் கையகப்படுத்துவதற்காகஅரசிடம் ஒப்படைத்து — தொழிற்சாலைக்கு வேண்டிய நிலத்தை அரசு பெறுவதில் ஒத்துழைத்தார்கள்; 24,000 ஏக்கர் நிலம் ஏற்கனவே உருக்காலைக்காகக் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது; அப்படியிருக்க 'தேவையான நிலத்தைக்கூட கையகப்படுத்தவில்லை' என்று மத்திய அமைச்சர் ஒருவர் இங்கு வந்து கூறுவது சரியன்று; மாநில அரசு மீது குறை சொல்வது, மக்களிடையே தவறான கருத்துக்களைப் பரப்புவதாக அமையும்.

சேலம்உருக்காலை இலாபகரமாக இயங்கவும் — உற்பத்தியாகவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது."

"தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களை யெல்லாம் விடத் தொழில் வளம் பெற்றிடவேண்டும் என்று விரும்புகிறோம்.

தேவைப்படும் அளவுக்குத் தொழில்வளம் கண்டுவிட்டோமா என்றால் அதுவும் இல்லை; அதே சமயத்தில், 'தொழில் வளம் இல்லவே இல்லை' என்றும் முழுமையாகப் பேசக் கூடாது.

அரசாங்கத்தின் சார்பில் தொழில் துறைக்கு எந்த அளவு முதலீடு செய்திருக்கிறோம் என்று பார்த்தால் உண்மை புரியும்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ 1.50 கோடி ஒதுக்கப்பட்டது; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 14 கோடி ஒதுக்கப்பட்டது; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 23 கோடி ஒதுக்கப்பட்டது; நான்காவது திட்டக் காலத்திலோ ரூ. 64 கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது; ஆகவே. நாம் தொழில் துறையை புறக்கணிக்கவில்லை என்பது தெரிய வரும்.

ஒரு நாட்டின் தொழில் வளருகிறதா என்பதைப் பார்க்க அங்கே பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவைப் பார்க்கவேண்டும்; 1966—67ல் 1237 மில்லியன் யூனிட் மின்சாரம் பயன்படுத்தப்பட்டது; 1970—71ல் 2230 மில்லியன் யூனிட் பயன்படுத்தி யிருக்கிறோம்.

இவையெல்லாம். தொழில் வளர்ச்சியில் நாம் மேற்கொண்ட வேகத்திற்கு உதாரணங்களாகும்.

மின் உற்பத்தியைப் பொறுத்தும் வேகமாக உற்பத்தி செய்திருக்கிறோம்.

"இந்த ஆட்சி வந்த பிறகு தொழில் வளர்ச்சிக்காக அனுமதி பெறவில்லை...புதிய தொழில்கள் வளரவில்லை" என்று குற்றஞ் சாட்டப் படுகிறது.

மத்திய அரசாங்கத்திடம், 'பெரிய தொழில்களை மேலும் துவக்க அனுமதி தரவேண்டும்' என்றுதான்கேட்கிறோம்; 'கொடுத்ததே போதும்' என்று இருக்கவில்லை.

1966—67ல் பெற்ற லைசென்சு அனுமதி 55; 1971—ல் பெற்ற அனுமதி 124; இந்த நிலையில், எப்படி, 'தொழில் வளர்ச்சி குன்றியது' என்று கூற முடியும்? 'இந்த அனுமதியும் போத வில்லை' என்று வாதாடிக் கொண்டிருக்கிறோம்.

தொழில்களைத் துவங்க நாம் முதலீடு செய்கிறோம்; 1966-ல் கமர்ஷியல் வங்கி மூலம் தமிழகத் தொழில்களுக்குத் தந்த உதவி ரூ. 11 கோடி 40 இலட்சம்; 1971ல் ரூ. 24 கோடியே 60 இலட்சமாகும்.

ஐ. டி. பி. ஐ. மூலம் தந்த உதவியில் இந்தியாவிலேயே தமிழ் நாடு இரண்டாவது இடத்தைப் பெறுகிறது; மராட்டியத்தில் ரூ. 2698 இலட்சம் கடன் தரப்பட்டது; தமிழ் நாட்டில் ரூ. 645½ இலட்சம் கடனாகத் தரப்பட்டது.

1967—68-ல் ரூ. 367 இலட்சமாக இருந்தது — இப்போது ரூ. 645 இலட்சமாக வளர்ந்திருக்கிறது.

ஐ. எம். சி. மூலம் தரும் உதவியிலும் தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது.

இவையெல்லாம் தொழில் வளர்ச்சியில் நாம் காட்டுகின்ற தீவிரத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கும் புள்ளி விவரங்களாகும்.

கழக அரசு, தனியார் துறையினரின் ஆற்றலைப் பயன்படுத்தி — நம்முடைய மூலதனத்தோடு மத்திய அரசின் மூலதனத்தையும் போட்டு தொழில்களை நடத்துகிறோம்; அந்தத் தொழிற்சாலைகள் மூடப்படுமானால் ஏற்று நடத்தவும் தயாராக இருக்கிறோம்.

இந்த ஒன்றிரண்டு ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்தப் பெறப்பட்ட முன் அனுமதிகள் 15; இதில் ரூ 50 கோடிக்கு மேல் மூலதனம் போட அரசு திட்டமிட்டிருக்கிறது.

1966—67-ல் போடப்பட்ட மொத்த மூலதனம் ரூ. 61 இலட்சம்; ஆனால் இந்த நான்கு ஆண்டுகளில் போடப்பட்டுள்ள மூலதனம் ரூ. 1,546 இலட்சமாகும்.

"சிறு தொழில்களுக்காக அதிக ஊக்கம் தரவேண்டும்—அப்போது தான் பொருளாதாரம் பரந்த அளவில் வளர முடியும்" என்பது கழக அரசின் கொள்கையாகும்.

சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு ஊக்கம்

சிறு தொழில் வளர்ச்சிக்காக ஏராளமாக உதவி செய்ய அரசு முயற்சி எடுத்துக்கொண்டது; 1966—67-ல், ரூ. 8 இலட்சம் தரப்பட்டது; 1970—71-ல் ரூ. 118 இலட்சம் உதவி செய்திருக்கிறது.

கழக ஆட்சி வந்த பிறகு சிறு தொழில்கள் பெரும் அளவிற்கு வளர்ந்திருக்கின்றன; 1966 வரை 11,600 சிறு தொழில்கள்தான் இருந்தன; 1967-லிருந்து 1971 வரை புதிதாக 13,690 சிறு தொழில்கள் துவக்கப்பட்டிருக்கின்றன.

நடுத்தரத் தொழில்கள் முன்பு 30 மட்டுமேதான் இருந்தன; இந்த நான்காண்டுகளில் அந்த எண்ணிக்கை 82-ஆக உயர்ந்திருக்கிறது.

இந்தச் சிறு தொழில்களுக்காக அரசாங்கம் ரூ. 91 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது.

தொழில்களுக்கு மூலப்பொருள்களை வழங்குவதையும் ஒப்பு நோக்கிப் பார்க்கவேண்டும்; 1969—70ல் ரூ. 90 இலட்சம் ஒதுக்கினோம்; 1970 மார்ச் வரை ரூ. 116 இலட்சம் ஒதுக்கினோம்; 1971—72ல் ரூ. 313 இலட்சம் அளவுக்கு மூலப் பொருள் வழங்கி யிருக்கிறோம்.

சக்தியற்ற — வலிவற்ற நிலையிலுள்ளவர்கள் கூட்டாகத்தொழில்களைத் துவங்க 1966—67ல் ரூ. 17.50 இலட்சம் வழங்கப்பட்டது; 1969—70ல் ரூ. 41 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நெசவாளர் பிரச்னை

கைத்தறி பற்றி உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்; அதில் நாங்களும் பங்கு கொள்கிறோம்.

நம் நாட்டில் பஞ்சி அதிகமாக உற்பத்தியாகி நம் நூலுக்கு வெளிச் சந்தையை எதிர்பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது;

அரசியல் கலப்பின்றி நெசவாளர்கள் வளர்ச்சிக்காக நாம் பாடுபட வேண்டும்.

இங்கே பேசிய கே. எம். சுப்பிரமணியம், 'விசைத் தறிகளை உடனடியாகக் கொண்டுவரவேண்டும்' என்றார்; அந்தக் கருத்து வரவேற்கத் தக்கது; ஆனால், அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருப்பவர்கள், நெசவாளர்களை நாங்கள் நசுக்குவதாகப் பேசுகிறார்கள்.

நிச்சயம் விசைத் தறிகள் கொஞ்சம் கொஞ்சமாக நாட்டில் வந்து தான் தீரும்; நெசவாளர்களுக்குப் பாதகமின்றி—அவர்களுக்குப் பாதுகாப்புத் தந்து — இந்த விசைத் தறிகள் கொண்டுவரப் படும்.

நெசவாளர்களுக்கு நேரடியாக இந்த அரசு உதவிகள் செய்யும்; 'அவர்களுக்கு எதுவுமே செய்யவில்லை' என்று கூறுவதை ஏற்க முடியாது.

நெசவாளர்கள் வாழ்வுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 6.50 கோடியும் மூன்றாவது திட்டத்தில் ரூ. 7.50 கோடியும் ஒதுக்கப்பட்டன.

இந்தஅரசு வந்தபிறகு ரூ. 10.60 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால், இது, நெசவாளர்களைப் புறக்கணிப்பதாக அர்த்தமாகுமா?

கைத்தறி நெசவாளர்களுக்குத் தரப்பட்ட 'ரிபேட்'கூட, 1966-67ல் ரூ. 64 இலட்சம் அளவுக்கே தரப்பட்டது; 1971-72ல் ரூ. 136 இலட்சம் என்கின்ற அளவுக்கு உதவி செய்திருக்கிறோம்.

இப்படி ஒவ்வொரு துறைகளும் வெற்றிகரமாக நடைபெற அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

அரசு மாறும்போது கொள்கையும் மாறி—நிலையற்ற பொருளாதாரக் கொள்கை நாட்டில் வந்தால் தொழில் வளர்ச்சி குன்றும்!

மத்திய அரசு தொழில்களுக்கு அனுமதி வழங்குவதை பொறுத்துத்தான் நாட்டின் தொழில் வளர்ச்சி வேகமாகச் செல்ல முடியும்.

ஜப்பானியர் கருத்தை உணருவது அவசியம்

"ஜப்பானியத் தொழில்களை வேறு நாடுகளில் தொடங்க முடியுமானால், அது, இந்தியாவில்—தமிழ் நாட்டில்தான் முடியும்; அந்த அளவுக்கு ஆற்றலுள்ளவர்கள் அங்கே தான் இருக்கிறார்கள்" என்று ஜப்பானியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இரும்பு உருக்கு நம் தொழிற்சாலைகளுக்குத் தேவை; ஆனால் மத்திய அரசு நமது மூலப் பொருள் தேவையை நிறைவேற்றவில்லை. *

ஏ! சிங்கமே!

சோம்பலான நிலைகடந்து சுறுசுறுப்பை எய்திட்டோம்,
தொடர்ந்தெழுவாய்சிங்கம்போல் தொண்டுகண்டவீரனே
நாம்மறவர், நாம்தமிழர் நம்மிதய நாட்டிலே
நன்றிகெட்டு அறிவிழந்து நரிகள்போல வாழ்வதோ?
தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் முழங்கிட
தெளிந்துள்ள நல்லறிவைத் திரமொடு அடைந்திட
தேமலர்கள் செறிந்துள்ள சீர்மிகுந்த நாட்டினில்
தோள்கொட்டி துணிவோடு தொடர்ந்தெழுவாய்வீரனே!

என்றுமுன்றன் இளங்குருதி இயம்புகின்ற வீரமாம்
எழுச்சிமிகு கதைகளையான் இயம்பிடுவேன் கவிதையாய்;
தொன்றுதொட்டு வந்துவந்து துயரமூட்டும் சாதிகள்,
துயரமிக்க மதப்பேய்கள் தொடர்ந்தெரிப்பாய் நாட்டிலே!
இன்றல்ல, நேற்றல்ல இயம்புகிறேன் உனதுயர்
இணையற்ற வீரமது பிறந்ததுவாம், புவியது
என்றன்று பிறந்ததுவோ அன்றுதொட்டு மானத்தால்
எரிதழல்போல், வளர்ஆல்போல் எழுந்ததடா வீரனே!

சித்திரங்கள், சிற்பங்கள் தெரிந்துரைத்த நாட்டிலே
சிற்பிகளாய் சமுதாயச் சிந்தனைசேர் அறிஞர்கள்
எத்திக்கும் போற்றுகின்ற இணையற்ற செல்வங்கள்,
இளங்கதிர்போல் தோன்றிநல்ல இன்பமிகு பாதைகள்
நித்தமிங்கே காட்டுகையில் நெஞ்சினிலே இருளினை
நெகிழ்ந்துருகித் தேக்கிவைத்து நீலிக்கண்ணீர்வடிப்பதோ?
புத்தனைப்போல் உயர்அறிவைப் புரியவைக்கப் புறப்படு!
பொலிர்கின்ற பாரதத்தாய் போற்றிவளர் சிங்கமே!

தன்மான நிலந்தன்னில் தமிழ்ச்சாதி அறிவினால்
தழைத்திடும் நிலைதன்னை, தாங்கவொணா எரிச்சலால்
நுண்மான் நுழைபுலத்தால் 'நோ' துடைக்கேறினையாது
நொந்துவேகும் சமுதாய நிறைவுகாணா மானிடர்
இன்றல்ல என்றென்றும் இருப்பதனால் சோர்ந்திடோம்
ஏ! அரிமா போன்றவனே ஏனுறக்கம் கொள்கிறாய்?
நன்றெறியும் அறிவுத்தீ நிறைவாயேந்தி ஓடுவாய்
நிகழ்காலப் புத்துலக நெஞ்சுநிறை சிற்பியே!

வெற்பன்ன திறங்கொண்டு விளங்கிட்ட முன்னோர்கள்
வெற்பினிலே முக்கொடியை விருப்புடனே நாட்டியே
கற்கண்டு தமிழணங்காள் கால்களிலே வெற்றியாம்
கவின்மலர்கள் படைத்திட்டார், கண்டுணர்ந்து மலர்கிறாய்!
சொற்கொண்டு முயற்சிமிகு தூயநன்மைச் செயல்களால்
தொடர்ந்தெழுவாய் உன்கடமைத் துணைஇந்த நாட்டிலே
நெற்கண்டு, கல்வியொடு நிறைத்தொழில்கள் கண்டுநாம்
நீணிலத்தில் உயர்ந்திடவே நினைந்துவாராய் சிங்கமே!

—கோ. இளங்கோவன்.

உரைகல்

"ஒரு குயிலின் குரல்"

ஆசிரியர்: குருவிக்கரம்பை

ஏ. சண்முகம், எம்.ஏ.,

விலை: ரூ. 2-50

கிடைக்குமிடம்:

பாண்டியன் பதிப்பகம்,
125, இந்திராணித் தெரு,
அய்யாவு நாயுடு குடியிருப்பு,
சென்னை-29.

சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் "புகாரில் ஒரு நாள்" கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற முன்னணிக் கவிஞர் குருவிக் கரம்பை ஏ. சண்முகம் அவர்களின் உயரிய படைப்பே, "ஒரு குயிலின் குரல்". "......பாரதி, பாரதிதாசனுக்குப் பின்னர் கவிதை வானம் இருண்டுவிடுமோ என்று கலங்காது இருக்கக் கண்முன்னர்க் காணும் கவிஞர் வரிசையில் சண்முகத்தையும் காண்கிறோம்" எனத் தஞ்சை தந்த தங்கம்—தமிழகத்துச் சிங்கம் தம் முகவுரையில் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மையே. சிறகொடிந்த குயிலின் இதயக் குரல், நம் இதயத்தை ஈர்க்கும் குரலாக அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

"நெற்றியில் கல்லால் அடிப்பவரும்—என்னை
நித்தம் புகழ்ந்து மகிழ்பவரும்—இங்கு
சுற்றி இருப்பதைக் காணுகிறேன்—ஒரு
சோதனையில் நான் வாழுகின்றேன்."

என்னும் வேதனைக் குரல் நம் வாழ்வின் பிரதிபலிப்பாகவும் உள்ளதன்றோ?

'சிலர் மரணத்தில், சிலர் வாழ்வு மலரத்தான் செய்கிறது' என்னும் உரைநடைத் தத்துவம் நம் உள்ளத்தைத் தொடுகிறது. வீரமங்கை சோன் ஆப் ஆர்க்கின் வேதனைக் குரல் — குருதியில் தோய்ந்து சிவப்பு மனிதர்களாகத் தோன்றும் நீக்ரோக்களின் நெஞ்சக் குமுறல்—நம் இதயத்தைவிட்டு என்றென்றும் நீங்காத இலக்கிய ஓவியங்கள்!

மீனவர்களின் பாட்டொலியில், மீளாத் துயில்கொள்ளும் பேரறிஞர் அண்ணாவின் பெருமைகளை அடுக்கிக்கொண்டே போகிறார் கவிஞர். ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது என்பதற்கு இக் கவிதை ஓர் எடுத்துக்காட்டு!

மொத்தத்தில், குருவிக்கரம்பை சண்முகம் அவர்களின் 'ஒரு குயிலின் குரல்" ஒரு தரமான இலக்கியப் படைப்பு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தோல்வியின் குழந்தையாகத் தோன்றி, உணர்ச்சிக் காற்றிலே ஓலமிடும் ஒரு சிறிய புல்லாங்குழல் இங்கேதான் இருக்கிறது என்கிறார் கவிஞர். புல்லாங்குழல் வேண்டுமானால் சிறியதாக இருக்கலாம். ஆனால், அதிலிருந்து வரும் இசை வெள்ளமோ, அவனி மக்கள் அனைவரையும் ஆட்கொள்ளும் ஆற்றல் பெற்றதாகத் திகழ்கிறது.

—மணிவேந்தன்.

புரட்சிப் பூக்கள்

(கவிதைகள்)

ஆசிரியர்: உலகக் குடிமகன்

வெளியீடு; எழுத்தாளர் கூட்டணி,
பறம்புக்குடி அஞ்சல்,
முகவை மாவட்டம்.

விலை: ரூ. 1—25

இதயத்தின், எண்ணத்தின் கொந்தளிப்புக்களை யெல்லாம் எழுத்துக்களாக்கி நூல் வடிவில் தந்திருக்கிறார் ஆசிரியர். உலக மக்களது இன்றைய போக்கு முழுவதுமாகத் திருந்த வேண்டும்—திருத்த வேண்டும் என்று ஆர்வத் துடிப்பில் தள்ளாடிக் கொண்டிருக்கிறார் என்பதை, இந்நூல் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.:

கோலம் ஏழையே கொள்கையில் குன்றெனும்
கோடை யிடியினைப் பார்!—அவன்
கொதித்தெழும் வேளையில் கோழையர்மீளுவர்
குறித்த முறையினைப் பார்!

என்று ஆசிரியர் தமிழனை மட்டு மல்ல; தன்னையே அறிமுகப்படுத்துகிறார். அண்ணா முதல், அன்னைத் தமி[illegible] வனியில், மன்பதையில் கா[illegible] கிடைக்கும் அனைத்துப் பற்[illegible]யும் பாபாடி[illegible] இருக்கிறார் என்[illegible] தோன்றுகிறது.

'உலகம் திருந்த வேண்டும்' என்று இன்று எல்லாருமே பொதுப்படையாகக் கூறத்தான் செய்கிறார்கள். திருந்துதற்கு அவர்கள் செய்ததென்ன? விடை காண்பது சற்றுக் கடினம்தான். குறைந்த பட்சம் 'புரட்சி பூக்கள்' என்ற இந்த ஒரு நூலையாவது அவர்கள் வாங்க வேண்டாமா? வாங்கிப் படிக்க வேண்டாமா? படித்துச் சிந்திக்கவேண்டாமா?

—சீயேயெம்.

செய்தி:

பிரிசிலி நகர் செட்டில் மெண்ட் பொதுநல சங்கம்

★

12-3-72 அன்று காலை பிரிசிலி நகர் செட்டில் மெண்ட் பொதுநல சங்க நிர்வாகிகளின் தேர்தல் திரு. ஆர். ரெங்கசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது அதுபோது **எஸ். செல்வராசை** தலைவராகக் கொண்ட ஐந்து பேர் கொண்ட நிருவாகக் குழு. தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.